Free Circulation Germany- England மணி: 73 - ஓசை: 326 கார்த்திகை. November. 2023

Orientalisch
Textilien & Schmuck
33 ஆவது ஆண்டு நிறைவு
தரமும், மலிவும், ஒரே இடத்தில்

Königswall 16 (Am Hbf) 44137 Dortmund Tel:0231 162377


# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950
29th years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன். B.F.A


# இஸ்ரேல் - பலஸ்தீன யுத்தம் இலங்கையை பாதிக்குமா?

இலங்கையில் இருந்து ஆர்.பாரதி



## வேற்றுலக உயிரினங்களை விட மனிதர்கள் முன்னேறியவர்களா?

Dr.நிரோஷன் தில்லைநாதன்



அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்

கார்த்திகை 27 மாவீரர் நாள்

Dr.IN



ரூபன் சிவராஜா (நோர்வே)

## ஆக்கிரமிப்பாளர் VS ஆக்கிரமிக்கப்பட்ட மக்கள்: இரண்டையும் ஒரே தட்டில் வைப்பதா?

இதழ்: 326




# புன்னகையுடன் என்னை கடந்து சென்ற கடவுள்

எனக்கு கடவுள் நம்பிக்கை உண்டு. ஆனால் உருவ நம்பிக்கை இல்லை. எம் மனதினை ஒரு குவியத்தில் குவிக்கவும், மனதை ஒருநிலைப் படுத்தவும் உருவம் உதவலாம். அவ்வளவுதான்.

கடவுள் மனித வடிவங்களில் அவ்வப்போது வந்து போகின்றார். ஆனால் எமக்கு கடவுள் என்றால் தலைக்கு பின்னால் மஞ்சள் நிற வட்டமான ஒளி இல்லை என்றால் நம்ப மாட்டோம். அப்படி கடவுள் உருவம் இதுதான் என எண்ணத்தில் பதிந்து விட்டது.

கடந்த மாதம் துருக்கிக்கு சென்றிருந்தேன், 30 பாகை நல்ல வெயில். கடலைக்கண்டால் எனக்கு கடவுளைக் காண்பது போல். இயற்கை அதன் அற்புதம், அழகு இவையாவும் ஒரு சக்தி உண்டு எனவும், அதற்கு கடவுள் எனவும் பெயர் சூட்டிமகிழும்.

அலைகள் குறைந்த கடல் அது. நான் பெரும் நீச்சல் தெரிந்தவன் அல்ல. ஆனால் தாயகத்தில் கீரிமலை கேணியில் நீள் பக்கமாக ஒரு முறை நீந்துவேன். பின் கல்லைப்பிடித்து நிற்பேன் அவ்வளவுதான்.

கடலில் இப்போது இறங்கிவிட்டேன். கழுத்தளவு தண்ணீரில் நின்று, இடையிடையே கரை நோக்கி நீந்துகிறேன். ஒரு குழந்தை என்னைப்பார்த்து புன்னகை உதிர்ந்தபடி நீந்திக் கடக்கிறது. அந்த புன்னகையின் பொருள் ‘இந்த முதியவருக்கு நீந்த தெரியாது‘ என்று வேண்டும் என்றால் நான் எடுக்கலாம்.

ஆனால்...! குழந்தை என்னை நீந்திக்கடக்கையில், பெரும் தெருக்களில் ஒரு வாகனம் என்னைக் கடந்து, வேகமாக கடக்கும் தருணத்தில் என்னைத் திரும்பி ஒரு சவால் பார்வை பார்த்து சிரித்து செல்லும் போது, எனக்கு வரும் மனநிலை இந்தக் குழந்தை என்னைக்  கடக்கையில் எனக்கு ஒரு துளியும் வருவில்லையே!.

அப்படி என்றால்.! என்னைக் கடந்து சென்றது கடவுளா! குழந்தையா!!.






இன்னும் ஒரு நிகழ்வு, துருக்கி அன்ராலியா விமான நிலையத்தில் வந்து இறங்கியதும், எம்மை Hotel க்கு அழைத்து செல்ல வரவேண்டிய வாகனம் வரவில்லை.

காத்திருக்கும் போது ஒரு டாக்ஸி தரகர் எம்மை பார்த்து, “I can help you“. என்றார். எமக்கு தமிழ் படம் பார்த்து பார்த்து யாரும் வலியவந்து உதவுவதாக சொன்னால் அவன் வில்லன் என்ற மனநிலையே நிரந்தரமாய்ப்போச்சு. பிறகு என்ன, அவனை உதாசீனப்படுத்திவிட்டு, வேறு வழி ஏதும் உண்டா என யோசிக்க அவன் விடுவதாக இல்லை. எனது கையில் உள்ள வாகனப் பதிவு கடிதத்தை சட்டேன வாங்கி, ஒரு தொலைபேசி எடுத்து கதைத் தான். பின் இவ்விடத்தில் நில்லுங்கள் வாகனம் வரும், என்று சொன்னபடி எனது அருகில் நின்ற மற்றொரு பயணியிடம் “வாகனம் வேண்டுமா? எம்மிடம்  டாக்ஸி உண்டு“ என தரகு வேலையை தொடங்கினான்.


ஆனால் எமக்கு மட்டும் நாம் எதிர் பார்த்து காத்திருந்த டாக்ஸியை அழைத்து எமக்கு உதவினான். தரகுத் தொழிலிலும் சக டாக்ஸி தொழிலாளிக்கு இரண்டகம் செய்யாத அவன், இப்போது என்னைக் கடந்து கவர்ந்து செல்கிறான். அந்த இடத்தில் ‘அவனும் கடவுள்தான்‘.



வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 326



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276


# இஸ்ரேல் – பலஸ்தீன யுத்தம் இலங்கையை பாதிக்குமா?



**இலங்கையிலிருந்து ஆர்.பாரதி**

பலஸ்தீன – இஸ்ரேலிய யுத்தம் ஒரு சிக்கலான மற்றும் நீண்டகால மோதலாகும். இரு நாடுகளின் பொருளாதாரங்கள் மற்றும் ஒட்டுமொத்த பிராந்தியத்தின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை இந்தப் போரர் ஏற்படுத்தியுள்ளது. உலகளாவிய எண்ணெய் விலைகள், வர்த்தகம் மற்றும் முதலீடுகள் போன்றவற்றின் தாக்கம் உட்பட இலங்கைப் பொருளாதாரத்திலும் இந்த யுத்தம் நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கங்களை ஏற்படுத்தப்போகின்றது.

–பார்த்தீபன்

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் மீண்டும் ஆரம்பித்துள்ள போர் தொடர்வதற்கான அறிகுறிகளே காணப்படுகின்றன. இந்தப் போர் இலங்கை



யின் பொருளாதாரத்திலும் தாக்கங்களை ஏற்படுத்துமா என்ற கேள்வி இன்று சாதாரண மக்களிடமும் எழுந்திருக்கின்றது. நிச்சயமாக உலக மயமாக்கப்பட்ட இன்றைய காலகட்டத்தில் இதன் தாக்கத்தை நாமும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதுதான் பொருளாதார ஆய்வாளர்களின் கருத்தாகவுள்ளது.

பலஸ்தீன – இஸ்ரேலிய யுத்தம் ஒரு சிக்கலான மற்றும் நீண்டகால மோதலாகும். இரு நாடுகளின் பொருளாதாரங்கள் மற்றும் ஒட்டுமொத்த பிராந்தியத்தின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை இந்தப் போர் ஏற்படுத்தியுள்ளது. உலகளாவிய எண்ணெய் விலைகள், வர்த்தகம் மற்றும் முதலீடுகள் போன்றவற்றின் தாக்கம் உட்பட இலங்கைப் பொருளா தாரத்திலும் இந்த யுத்தம் நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கங்கள் பலவற்றை ஏற்படுத்தப்போகின்றது.

அவை தொடர்பாகவும், இதன் தாக்கங்களைக் குறைப்பதற்கு இலங்கை அரசாங்கம் எவ்வாறான உபாயங்களைக் கையாளலாம் என்பதையிட்டும் சுருக்கமாகப் பார்ப்போம்.

## போரும் பொருளாதாரமும்

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையேயான போர் கடந்த வாரம் ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதடன் தீவிரமடைந்திருக்கின்றது. இரு தரப்பினரும் வான்வழித் தாக்குதல்கள் மற்றும் ராக்கெட் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இந்த மோதல் ஏற்கனவே இரு நாடுகளின் பொருளாதாரத்திலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது,



மேலும் உலகப் பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்த யுத்தம் இலங்கையின் பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும். இலங்கை அரசாங்கம் இஸ்ரேல் மீது ஏற்கனவே இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளுக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. 2020 பெப்ரவரியில் இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. பலஸ்த்தீனப் பிரச்சினைக்கு சமாதான முறையில் தீர்வொன்றைக் காணப்பதற்காக இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கத்டனேயே இந்தக் கட்டுப்பாடுகளும் தடைகளும் விதிக்கப்பட்டன. இந்தத் தடை இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்கனவே தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியையும் அரசாங்கம் உயர்த்தியுள்ளது. இந்த தடைகள் மற்றும் கட்டுப்பாடுகள் இலங்கைக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீடுகளை பாதித்துள்ளன. இப்போது யுத்தம் மீண்டும் வெடித்துள்ளதால் இந்த நிலை மேலும் மோசமடையலாம்.

## எண்ணெய் விலை உயரும்?

போரினால் எண்ணெய் விலையும் உயரும் நிலை உள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் எண்ணெய் ஒரு முக்கிய இறக்குமதியாகும்.எண்ணெய் விலை அதிகரிப்பு

04 ஆம் பக்கம் பார்க்க...






அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்



# இஸ்ரேல் – பலஸ்தீன யுத்தம் இலங்கையை பாதிக்குமா?

போக்குவரத்து மற்றும் பிற பொருட்கள் மற்றும் சேவைகளின் செலவுகள் அதிகரிக்க வழிவகுக்கும்.இது இலங்கையின் பொருளாதாரத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். அத்துடன் பணவீக்கமும் அதிகரிக்க வழிவகுக்கும். கடந்த வருடம் உருவாகிய பொருளாதார நெருக்கடி இதன் மூலம் மேலும் தீவிரமடையும் வாய்ப்புக்களும் உள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எரிபொருட்களின் விலை உயர்வடையும் ஆபத்து இருப்பதை பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது. எரிபொருட்களின் விலைகள் உயர்வடைவது பெரும்பாலான பொருட்கள், சேவைகளின் விலைகள் உயர்வடைவதற்கு வழிவகுக்கலாம்.

## சுற்றுலாத்துறை பாதிப்பு

சுற்றுலா இலங்கைக்கான அந்நிய செலாவணி வருமானத்தின் முக்கிய ஆதாரமாக உள்ளது. இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலான போர் காரணமாக இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடையலாம். கடந்த காலங்களில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் குறிப்பிட்ட தொகையில் இலங்கைக்கு வருகை தருகின்றனர். 2020 இல் இலங்கை அரசாங்கம் இஸ்ரேலுடனான இறக்குமதி மற்றும் ஏற்றுமதியை தடை செய்ததன் பின்னர் இலங்கைக்கு வருகை தரும் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் நிலவும் மோதல்கள் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மேலும் குறைவடைந்துள்ளது.

## முதலீட்டில் பாதிப்பு

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான யுத்தம் இலங்கைக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டை சீர்குலைக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. ஏனெனில், இலங்கை அரசாங்கம் இஸ்ரேல் மீது இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு தடை உட்பட பல தடைகளை ஏற்கனவே விதித்துள்ளது. பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியையும் அரசாங்கம் உயர்த்தியுள்ளது. இவை வர்த்தகத் துறையிலும் பாதிப்பை ஏற்படுத்தும். இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான யுத்தம் இலங்கையில் பணவீக்கம் அதிகரிக்க வழிவகுக்கும். எண்ணெய் மற்றும் பிற பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்பதே இதற்குக் காரணம்.

## தொழில் வாய்ப்பு பாதிப்பு

இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையர்கள் போரினால் கணிசமான அளவில் பாதிக்கப்படலாம். போரின் பொருளாதார பாதிப்பு காரணமாக இஸ்ரேலில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் தொழிலாளர்களை பணிநீக்கம் செய்ய நிர்ப்பந்திக்கப்படுவதால், இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு இந்த யுத்தம் வேலை இழப்புக்கு வழிவகுக்கும். இஸ்ரேலில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் யுத்த காலத்தில் வெளிநாட்டு ஊழியர்களை வேலைக்கு அமர்த்த தயங்கக்கூடும் என்பதால், போர் இலங்கையர்களுக்கு இஸ்ரேலில் வேலை கிடைப்பதை மேலும் கடினமாக்கலாம்.இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையிலான யுத்தம் இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையர்கள் மீதும் இலங்கையின் பொருளாதாரத்திலும் கணிசமான எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தலாம். போரின் காலம் மற்றும் தீவிரம்,உலகப் பொருளாதாரத்தில் போரின் தாக்கம், போருக்கு இலங்கை அரசின் பதில் உள்ளிட்ட பல காரணிகளைப் பொறுத்து தாக்கத்தின் தீவிரம் அமையும். கடந்த வருடம் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்தே கணிசமான இலங்கையர்கள் இஸ்ரேலுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுச் சென்றார்கள். இப்போது வேலை இழப்பு என்பது தனிப்பட்ட முறையில் அவர்களுடைய குடும்பத்தை கணிசமாகப் பாதிப்பும். அதேவேளையில் நாட்டின் பொருளாதாரத்திலும் அது பாதிப்பை ஏற்படுத்தும். இஸ்ரேலில் உள்ள



இலங்கை தூதரகத்தின் தகவலின்படி, மார்ச் 2023 இல் சுமார் 25,000 இலங்கையர்கள் இஸ்ரேலில் வசித்து வருகின்றனர். இதில் திறமையான மற்றும் திறமையற்ற தொழிலாளர்கள் மற்றும் வீட்டு பணியாட்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் அடங்குவர். அதிக சம்பளம், நல்ல பணிச்சூழல், புதிய திறன்களைக் கற்கும் வாய்ப்பு உள்ளிட்ட பல காரணங்களுக்காக இலங்கையர்கள் இஸ்ரேலில் பணிபுரிய விரும்பிச் செல்கின்றார்கள். இஸ்ரேலிய அரசாங்கம் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கு இலவச மருத்துவம் மற்றும் கல்வி போன்ற பல சலுகைகளையும் வழங்குகிறது. போரினால், இந்த வாய்ப்புக்களில் கணிசமான பாதிப்புக்கள் ஏற்படலாம்.

## அரசாங்கத்தின் அறிவிப்பு

இஸ்ரேலில் பணிபுரியச் சென்ற இரண்டு இலங்கையர்கள் குறித்த தகவல் இல்லை என ஏற்கனவே செய்திகள் வெளிவந்துள்ளன. இது அங்கு பணிபுரியும் இலங்கையர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர்களின் நிலை ஆபத்தானதாக – நிச்சயமற்றதாக இருப்பதை உறுதிப்படுத்துகின்றது. இதனையடுத்து, இஸ்ரேலுக்கு பணியாளர்களை அனுப்பும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். அத்துடன், மேலும், இஸ்ரேலில் இருந்து நாடு திரும்புவதற்கு விரும்பும் இலங்கைப் பிரஜைகளுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஆக, பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து இலங்கைக்கு நம்பிக்கையளித்த வெளிநாட்டு வேலை வாய்புக்கான ஒரு களம் மூடப்படபடுகின்றது. இது இலங்கைக்கு வரக்கூடிய அந்நியச் செலாவணியிலும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும். தனிப்பட்ட முறையிலும் குடும்பங்கள் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கும் நிலை உள்ளது. இருந்த போதிலும் குறிப்பிடத்தக்க ஒரு தொகையினர் இஸ்ரேலில் பாதுகாப்பாக இருக்கின்றார்கள் என்பதும், அவர்களுடைய சேவை இஸ்ரேலுக்குத் தேவையானதாக இருக்கின்றது என்பதும் சாதகமான ஒரு அம்சமாகவே பார்க்க வேண்டும்.!

**பொருளாதாரத்தை பன்முகப்படுத்துதல்:** இலங்கை அரசாங்கம் சுற்றுலா மற்றும் எண்ணெய் இறக்குமதியைச் சார்ந்திருக்காத வகையில் பொருளாதாரத்தை பல்வகைப் படுத்துவதற்கு செயற்பட வேண்டும். இது இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையேயான போர் போன்றவற்றினால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு மத்தியில் பொருளாதாரத்தை மேலும் நெகிழ்ச்சியடையச் செய்யும். பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் அது அவசியம். இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையிலான யுத்தம் இலங்கையின் பொருளாதாரத்தில் கணிசமான தாக்கத்தை ஏற்கனவே ஏற்படுத்தியுள்ளது. போரினால் சுற்றுலாத்துறையில் சரிவு, எண்ணெய் விலை உயர்வு,

வர்த்தகம் மற்றும் முதலீட்டில் இடையூறு மற்றும் பணவீக்கம் அதிகரித்தது. பொருளாதாரத்தை பல்வகைப்படுத்துதல், உள்நாட்டு மற்றும் பிராந்திய சுற்றுலாவை ஊக்குவித்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவை வழங்குதல் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை பேணுதல் போன்ற செயற்பாடுகளின் மூலமாக போரின் எதிர்மறையான தாக்கங்களைத் தணிக்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க முடியும்.







அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்


# யேர்மனி - மாநிலத் தேர்தல் முடிவுகள்- ௨0௨3

வ.சிவராஜா (யேர்மனி)

யேர்மனியிலுள்ள 16 மாநிலங்களில் இரு மாநிலத் தேர்தல்கள் கடந்த 08.10.2023 அன்று நடைபெற்றன. தேர்தலில் வெற்றிபெற்ற பிரதான கட்சிகளின் விபரம்

Christlich-Soziale Union in Bayern (CSU)
Bündnis 90/Die Grünen (Grüne)
Freie Wähler (FW)
Sozialdemokratische Partei Deutschlands (SPD)
Alternative für Deutschland (AfD)
Freie Demokratische Partei (FDP)

இரு மாநிலங்களிலும் யேர்மனியின் மத்திய அரசின் பிரதான எதிர்கட்சிகளின் கூட்டணி வெற்றி பெற்றுள்ளன. குறிப்பாக யேர்மனியில் மிகவும் வசதிபடைத்த மாநிலமான பயான் (பவேரியா) மாநிலத்தில் மிக நீண்டகாலமாக ஆட்சியைத் தக்க வைத்துக்கொண்டிருக்கும் சி எஸ் யு(CSU) கட்சியானது வெற்றியைப் பதிவாக்கி மீண்டும் கூட்டணி அமைத்து அரசமைக்க விருக்கின்றது. மாநிலப் பாராளுமன்றத்தில் 203 (MP) இருக்கைகளுக்கான தேர்தல் முடிவுகளைப் பார்ப்போம்..







பயான் (Bayern) மாநில பாராளுமன்றக் கொடி

இன்னொரு மாநிலமான கீசன் (Hessen) மாநிலத் தேர்தலின் முடிவுகளின் படி யேர்மனியில் பிரதான எதிர்க் கட்சியான சி டி யு (CDU) கட்சியோடு கூட்டணிக் கட்சிகளும் வெற்றி பெற்று ஆட்சியமைக்கவுள்ளன. இந்த மாநிலத்தில் 133 இருக்கைகளுக்கான (M.P) தேர்தல் முடிவுகளைப் பார்ப்போம்..

கீசன் (Hessenn) மாநில பாராளுமன்றக் கொடி






**குறிப்பு:-**

நடைபெற்று முடிந்த இரு மாநிலத் தேர்தல்களின் முடிவைப் பார்க்கும்பொழுது யேர்மனியின் பிரதான ஆளுங்கட்சியின் செல்வாக்குக் குறைவடைந்திருக்கின்றது. எதிர்க்கட்சிகளின் செல்வாக்கு அதிகரித்துள்ளன.

குறிப்பாக சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பமான தீவிர வலதுசாரிக் கட்சியான மாற்றத்துக்காக மக்கள் (A&D) கட்சியின் செல்வாக்குப் படிப்படியாக அதிகரித்து வருகின்றது.

இந்தக்கட்சியானது வெளிநாட்டவர்களுக்கு எதிரான கட்சியாகவே இருந்து வருகின்றது. அதாவது...

- அனைத்து வெளிநாட்டவர்களும் யேர்மனியைவிட்டு வெளியேற வேண்டும்
- வெளிநாட்டவர்களால் தமக்கு வீடு கல்வி வேலைவயாய்ப்பு இல்லை
- வெளிநாட்டவர்களால் தமது சமூகச் சீரழிவுகள் பெருகுகின்றது
- தமது நாட்டுப் பணத்தை ஏன்?.. வெளிநாட்டவர்களுக்குச் செலவழிக்க வேண்டும்
- வெளிநாட்டவர்களால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு தமது வாழ்க்கைத்தரம் குறைவடைகின்றது.
- வெளிநாட்டவர்களின் சனத்தொகைப் பெருக்கத்தால் தமது அனைத்து உரிமைகளும் பாதிக்கப்படுகின்றன
- வருடாவருடம் பெருந்தொகையான வெளிநாட்டவர்கள் புகலிடம்கோரி வருவதால் அளவுக்கு அதிகமான அகதிகளால் நாட்டுக்குப் பெரும் நட்டமும் பிரச்சனைகளும் அதிகரிப்பு..

எனப் பல வேறு குற்றச்சாட்டுக்களைக் கூறிவருவதால்தான் இந்தக் கட்சியின் செல்வாக்கு அதிகரித்து வருவதாக நம்பப்படுகின்றது. இருந்தும் மத்திய



அரசின் மனிதாபிமான நடவடிக்கைகளால்தான் நமது தாய்நாடு உட்பட பல ஆயிரக்கணக்கான அகதிகள் இந்த நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள். எதிர்காலத்தில் பல்வேறு நெருக்கடிகளும் சவால்களும் அகதி மக்களுக்கு உண்டு என்பது நிரூபணமாகின்றது...

**ஆசிரியர் - மண் சஞ்சிகை - யேர்மனி - 15.10.2023**



# Lucky Fly Reisebüro

Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171

ஆடம்பரமான அழகான கப்பலில் எட்டு நாட்களும், கட்டாரில் இரு நாட்களும் சுற்றுலா.

(17.12.2023- 19.03.2024 Every Sunday)

ROUND TOUR : Doha-Abudhabi-Sir Bani yas Island - Dubai



Qatra Airways













Inside Cabin +flight
€ 1749

Ocean Cabin + flight
€ 1899

Balcony Cabin+flight
€ 2025

**Free Food and Entertainment**

QATAR - THE LAND OF ART & CULTURE



City tour - Full day /Desert Safari tour full day




உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.

e.mail: info@L-Fly.de | www.L-fly.de

SriLankan Airlines | QATAR AIRWAYS القطرية | Emirates | طيران الخليج Gulf Air

Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171

Essener Str.26 44793 Bochum-Germany



# ஏற்றுமதி

"சேர் அடுத்த patient ஐ வரச் சொல்லவோ எண்டு கேட்டிட்டு, 13 நம்பர் வாங்கோ " எண்டு கிளினிக்கில நிக்கிற பிள்ளை கூப்பிட ரெண்டு பேர் வந்திச் சினம்.

என்ன பிரச்சினை ?

" நாரி நோகுது "

எத்தினை நாளா?

" கொஞ்ச நாளா"

நாரி மட்டும் தானா இல்லாட்டி வேற எங்கேயும் நோகுதா?

" இல்லை சில நேரம் கழுத்தும் நோகும், போன கிழமை முழங்காலும் நொந்தது" .

கால் விறைக்குதா?

ஓம் அதோட தலையும் விறைக்குது.

சோதிச்சுப்பாத்து ஒண்டும் இல்லை எண்டு சொல்லீட்டு,பதினெட்டு வயசு தானே படிக்கிறீங்களா எண்டு கேக்க,

" இல்லை "

வேலை செய்யிறீங்களா?

" இல்லை "

அப்ப என்ன செய்யிறீங்க

" சும்மா தான் இருக்கிறன் "

அப்ப குறிக்கிட்டது ஒரு நாப்பது வயது " இல்லை அவ வெளீல போகப்போறா, கலியாணம் முற்றாகீட்டுது, அதுதான் போக முதல் எல்லாம் ஒருக்காப் பாத்தால் நல்லம் எண்டு வந்தனாங்கள், ஒருக்கா எல்லா ளஉயபெ உம் பண்ணிப் பாக்கலாமா" எண்டு கேட்டா , vehicle full service போட்டுத் தாறீங்களா எண்ட மாதிரி.

அப்ப மகளுக்கு நோ எல்லாம் இல்லையா? " இல்லை எனக்குத் தான் இடைக்கிடை நாரி நோகிறது. இவ இப்ப வெளீல போனாப் பிறகு தேவை எண்டு இப்ப மேக்கப், கேக் ஐசிங், தையல் எல்லாம் படிக்கிறா , ஒரு நாள் நாரி நோகுது எண்டு சொன்னவள் அது தான் போக முதல் எல்லாத்தையும் காட்டீட்டால் நல்லம் எண்டு வந்தனாங்கள். அவையும் சொன்னவை வரமுதல் உங்கயே எல்லாத்தையும் காட்டீட்டு வரச்சொல்லி, ஒரு பிரச்சினையும் இல்லைத் தானே .." எண்டு அம்மா சொன்னதுக்கு நான் தலையை ஆட்ட மேக்கப்பை தனக்கும், அம்மாக்கும் போட்டுப் பழகிக் கொண்டிருந்த மகள் சந்தோசமா வெளிக்கிட்டுப் போனா.

எல்லா ியவளைவெ உம் பாத்து முடிய , "சேர் எனக்கு கலியாணம்" எண்டு கிளினிக்கில வேலை செய்யிற பிள்ளை வந்து சொல்லிச்சுது.

எப்ப ?

வாற மாசம்

எங்க ?

இந்தியாவில

ஏன் அங்க?

அவருக்கு இங்க வரேலாதாம்

போய் எவ்வளவு காலம்?

கொஞ்சக் காலம்

எந்த இடம்?

விசாரிச்சதோ ?

"தூரத்துச் சொந்தக்காருக்குப் பக்கத்து வீட்டுக் காரருக்க தெரிஞ்ச ஆக்களாம், அவரோட நேர கதைச்சதாம் , வயசு கூடத் தான் ஆனாலும் எப்பிடியும் எனக்கு வெளீல போனாக்காணும், நான் இண்டையோட வேலையால நிக்கப் போறன்" எண்டு சொன்ன பிள்ளைக்கு வாழ்த்துச் சொல்லி எனக்கு வரேலாது இந்தாரும் என்டை gift எண்டு குடுத்த envelope ஐ வாங்கிக் கொண்டு சந்தோசமா வெளிக்கிட்டிச்சிது அந்தப் பிள்ளை.

அதுகள் போனாப்பிறகும் இடைக்கிடை இப்பிடிக் கன வாகனங்கள் service க்கு வந்து போய்க்கொண்டிருந்திச்சுது ஒவ்வொரு மாசமும்.

ரெண்டு மாசம் கழிச்சு இந்தியாவுக்கு கலியாணத்துக்குப் போன பிள்ளை திருப்பியும் வேலைக்கு வந்திச்சுது.

"ஆ எப்பிடி இருக்கிறீர், கலியாணம் எப்பிடி, அவர் எங்க "? எண்டு ஆக்களுக்கு முன்னால கேட்ட கேள்விக்கு விடை உடன வரேல்லை, ஆனாலும் பிறகு வந்து , " Sir இதுதான் photo எல்லாம் வடிவா நடந்தது. போய் ளிழளெழச க்கு அலுவல் பாக்கிறாராம் அநேமா மூண்டு மாசத்தில கூப்பிடுவன் எண்டவர் " எண்டு நம்பிக்கையோட சொலலீட்டுப் போச்சுது.

நாலு மாசம் கழிச்சு

"என்ன மாதிரி போற அலுவல் எண்டு கேக்க" , " அவருக்கு இப்ப தான் பாஸ்போட் வந்ததாம் இனித்தான் கூப்பிடுவாராம்". அப்ப இந்தியாவுக்கு கள்ளப் பாஸ்போட்டிலயோ வந்தவர் எண்ட கேள்விக்கு அந்தப் பிள்ளைக்கு விடை தெரியேல்லை.



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

ஆறு மாசம் கழிச்சு " Sir ஏதும் நல்ல வேலை இருந்தாச் சொல்லுங்கோ சம்பளம் இங்க காணாது, கலியாண வீட்டுக்கடனையே கட்டேலாமல் நிக்கிறம் அதோட போறதும் இன்னும் சரிவரேல்லை " எண்டிச்சுது அந்தப் பிள்ளை. அதுக்கு மேல ஒண்டும் கேக்கேல்லை.

ஒரு வருசத்தால்

" Sir அது சரிவரேல்லை இது அக்கான்டை மாமான்டை சம்மந்த பகுதிக்காரர் கொண்டந்தவராம் அடுத்த மாசம் இந்தியாவுக்குப் போய் அப்பிடியே போயிடுவன்" எண்டு இந்த முறை நம்பிக்கையா good bye எண்டு அதே பிள்ளை சொல்லீட்டுப் போச்சுது, பதியப்படாமல் நடந்த முதல் கலியாணம் முறிக்காமலே முறிஞ்சது ஒருத்தருக்கும்

18 ஆம் பக்கம் பார்க்க...



TTS ASIEN SUPERMARKT
TTS Brothers GmbH & Co.KG *Lebensmittel *Seafood *Textilien *Schmuck
Germany நாட்டில் 33 ஆண்டுகளைக் கடந்த ஒரே நிறுவனம்
உங்கள் வீட்டுத் தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள் மற்றும் ஆடை அணிகலன்களுக்கும் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel: 0231 819288
Wolbecker 27
48155 Munster
Tel: 0251 13 65 194
Helmholtz Str 11 |
46045 | Oberhausen
Telefon: 0208 20 28 29
இனிய தீபத் திருநாள் வாழ்த்துக்கள்
நம்பிக்கை! நாணயம்!! கைராசி!!!
அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்




ஜூட் பிரகாஷ்
(அவுஸ்திரேலியா)

# மச்சான் World Cup இல நாங்க ஸ்ரீலங்காவை சப்போர்ட் பண்ணலாமோ?

அம்மட்ட சிறி... கடைசிவரை கூடாது

சரி.. அப்ப இந்தியா?

விசரா உனக்கு.. அவங்க தான் எங்களை அழிச்சது..

பாக்கிஸ்தான்காரன் ஓகே தானேடா..

யோவ்.. எல்லா ஆயுதமும் அங்க இருந்து தான் வந்தது..

பங்களாதேஷ் பாவம் தானேடாப்பா..

கோத்தாக்கு டொலரில் கடன் குடுத்து விழ இருந்த இலங்கை பொருளாதாரத்தை காப்பாத்தினது அவங்களடாப்பா..

ஒஸ்ரேலியா ஒன்றும் செய்யேல்ல தானே மச்சான் ?

டேய்.. மடையா.. ரோந்து கப்பலை நேவிக்கு குடுத்தது மறந்து போச்சா

ஓமடா மறந்திட்டன்.. இங்கிலாந்து திறமோ? கள்ள நாய்கள்.. அவங்களால தான் இவ்வளவு பிரச்சினையும்.. போகேக்க பிரிச்சு தந்துட்டு போயிருக்கோணும்..

நெதர்லாந்துகாரன்கள் அநியாயத்துக்கு நல்லவன்கள் தானே, மச்சான்?

என்ன பேக்கதை.. எங்கட சங்கிலியன் மன்னனை கொன்று யாழ்ப்பாண ராஜ்ஜியத்தை அழித்தது டச்சுக்காரன்கள் என்ற வரலாற்றை மறக்கேலாது..

நியாயம் தான்.. நியுஸிலாந்து நல்ல நாடு தானே?

அவங்க தான் அங்கர் பாலில் இருந்து தமிழை தூக்கினவங்கள்..

அது வேறயா? அப்ப சவுத் அஃபிரிக்கா?

சண்டை நடக்கேக்க மூடிக் கொண்டிருந்த கசுமாலங்கள்.. அவங்களை சப்போர்ட் பண்ணேலாது.

அப்ப ஒரு நாடும் மிச்சமில்லை மச்சான்.. ஏன் ஆப்கானிஸ்தான் இருக்கேடாப்பா..

ஓ.. அதை மறந்திட்டன்...

ஆப்கானிஸ்தான் ஓகே மச்சான் .. அங்க இருந்து தான் இயக்கம் ஆயுதங்கள் வாங்கியாந்தது.. SAM 7 எல்லாம் ஆப்கானிஸ்தான்காரன் அறா விலைக்கு குடுத்தவன்களாம்..

அப்ப சரி.. கம் ஓன் ஆப்கானிஸ்தான் ஓமடா.. ஆப்கானிஸ்தான் ஜெயவேவா டேய்...அது சிங்களமடா..

ஆப்கானிஸ்தான்.. வெற்றிவேல் வீரவேல்

# அபிநயதேராவின் வளர்ச்சியில் பதினேழு ஆண்டுகளாய் துணைக்கரம் தந்த தூய நேயத்தோர் போற்தாள்களைப் போற்றுகின்றோம்



சின்ன சின்னதாய் சேகரித்த ஆயிரமாயிரம் வானவில் நினைவுகளை, மயிலிறகு போல் பத்திரமாய் எம் புத்தகத்தின் 18வது அத்தியாயத்திற்குள் பதித்து நிற்கிறோம். ??

பதினேழு ஆண்டுகளாய் துணைக்கரம் தந்த தூய நேயத்தோர் பொற்தாள்களைப் போற்றுகின்றோம்??

மகாகுரு 'பத்மபூஷண்' பேராசிரியர் ஊ.ஏ.சந்திரசேகர் ஐயாவின் தனிப் பெருங்கருணையின் சுடர்கள் எம் அக-வொளியாகி வழிகாட்டிடப் பிரார்த்திக்கின்றோம் ??

'வையகம் எங்கும் இன்பம் நிலவுக
செயல்கள் யாவிலும் இன்பம் நிறைக
பெய்யும் மழையாய் இசைதான் பொழிக
ஒய்யார அழகாய் நடனம் அமைக
உயிர்கள் எல்லாம் இன்பம் எய்துக
உயிர்கள் எல்லாம் இன்பம் எய்துக '

கலாசூரி திவ்யா சுஜென்

# குவேனி எனப்படும் கவினி



மேற்குக் கரை மேகங்கள்
செஞ்சூரியன் விழுங்கிச்
சிவந்திருந்தன

ஈழக்காற்று
ஈரம் சூடித்
திரிந்து கொண்டிருந்தது

அவள்
வழமை போலத் தன்
ரத்தினத் தீவில்
சிவந்த மண்ணின்
சில்மிச வாசத்தில்
நூல் நூற்றுப்
பொழுது போக்கிக் கொண்டிருந்தாள்

ஆழக்கடல் தாண்டிச்
சிங்கப் படகுகள்
சில கரை கண்டன

அதிசயக் காதல் மூள
அவசரக் காமம்
கொண்டாள்
ஓர் பவளத்தேசம்
பறிபோனது !

நவயுகா
'சூர்ப்பனகையும்
ஒரு பவளத்தீவும்'





Tel:0179 2310 560 Wolbecker Str.16a 48155 Münster (Eingang von Bremer Platz neben Parkhaus Ausgänge)
அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்

# நமது கதைகளை முழுவதுமாக ஒதுக்க நினைக்கிறன பேரினவாத சக்திகள்




Jaffna University's war memorial built illegally

RASULA DILHARA GAMAGE

Authorities have decided that the wa[r] commemoration monument built by stu[-] dents on Jaffna University



**யாழ்** பல்கலைக்கழகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியானது சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த நினைவுத்தூபியை அமைப்பதற்கு அனுமதி வழங்கிய நிர்வாகத்தின் மீது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெற்கிலிருந்து வெளிவருகிற ஆங்கில நாளிதள் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. மேலும் குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி செயலகம், பொலிஸ் திணைக்களம், இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான ஆணைக்குழு ஆகியவை இணைந்து பல்வேறு பல்கலைக்கழக அலுவலர்களிடம் இருந்து அறிக்கைகளை பதிவு செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வாசிதது விட்டு இலகுவில் கடந்து சென்றுவிட முடியாத செய்தி இது. வடக்கில் பிறந்து வளர்ந்து யுத்த காலத்தில் கல்வி கற்று அதே நிலத்தில் வாழ்ந்து வருகிற இந்த நாட்டின் பிரஜை என்கிற வகையில் மேற்குறித்த செய்தி அதிக கவனத்திற்குரியதாகிறது.



போரிலே உயிர் நீத்தவர்களின் நினைவாக நடுகல் அமைத்து வழிபடுகிற மரபு காலம் காலமாக நம்மிடம் இருந்து வருகிறது. சங்க காலத்தின் வழி தொடர்ந்து வருகிற இம் மரபை ஒட்டியே கிராமியத் தெய்வ வழிபாடுகள் தோற்றம் பெற்றன என்கிறார்கள் மானுடவியலாளர்கள். இப்பின்னணியில் யாழ் பல்கலைக்கழகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள தற்போதைய நினைவுத் தூபியானது முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த உறவுகளின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள சின்னமாகும். இத் தூபியின் பின்னே இந்த நிலத்தின் வரலாறும் உளவியலும் வலுவான சமூக இருப்பின் அடையாளமும் பொதிந்து உள்ளது என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய வலுவான உண்மையாகும். வலிமையான மாணவ சமூகத்திற்கு இந்த நிலத்தின் கதைகளை எதிர்வரும் காலத்திலும் எடுத்துச் சொல்லுகிற சின்னமாகும். எனவே இதற்கு எதிராக நிகழ்த்தப்படுகிற திட்டமிட்ட அழித்தல் செயற்பாடுகளை உரிய முறையில் முறியடிக்க வேண்டியது பல்கலைக்கழக சமூகத்தினது மட்டுமன்றி புத்திஜீவிகள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இன அழித்தல் என்பது வெறுமனவே ஒரு சமூகத்தின் மனிதர்களை அழிப்பது மட்டுமல்ல, மாறாக அந்த இனக்குழு சார்ந்திருக்கக் கூடிய அடையாளங்களை மெல்ல மெல்ல அழித்து இனத்தின் இருப்பினை சிதைப்பதுமாகும், இதனையே காலம் காலமாக நிகழ்த்திவருகிறது இலங்கை அரசு. ஒருபுறம் தமிழ் மக்களின் உணர்வுகளில் பதியக்கூடிய எச்சங்களை சிதைப்பது, வரலாற்றின் கதைகளை திரிபு படுத்துவது, வரலாற்று எச்சங்களை மாற்றி அமைப்பது மற்றும் இளைய சமூகத்தினுடைய போக்குகளை மாற்றக்கூடிய நிகழ்ச்சி நிரல்களை அரங்கேற்றுவது என்று தொடர்கின்றன நிகழ்ச்சி நிரல்கள். தெரிந்தோ தெரியாமலோ இத்தகைய செயற்பாடுகளுக்கு நமது சமூகமும் பங்குதாரர்களாகி விடுகிறது என்பதுதான் வேதனை.



சர்மிலா வினோதினி

யாழ் பல்கலைக்கழகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியை இடித்து அழிப்பதன் ஊடாக எதிர்கால பல்கலைக்கழக மாணவ சமூகத்திடம் இருந்து நமது கதைகளை முழுவதுமாக ஒதுக்க நினைக்கிறன பேரினவாத சக்திகள். ஆனால் யுத்தம் முடிவுற்றதாக சொல்லப்பட்டு இத்தனை ஆண்டுகள் கடந்திருக்கக் கூடிய நிலையில் உடல் உள பாதிப்புக்களோடும் சந்ததிகள் கடந்தும் கடத்தப்படக் கூடிய மன அழுத்தங்களோடும் மக்கள் உலவுகிற இடங்களில் யுத்த வெற்றிச் சின்னங்களை அமைத்திருக்கிறது இலங்கை அரசு. உதரணமாக இறுதி யுத்த காலப் பகுதியில் அதிக பாதிப்புக்களை சந்தித்த கிளிநொச்சி மாவட்டத்தின் ஆனையிறவில் நிமிர்ந்து நிற்கிறது வெற்றிச் சின்னம், கிளிநொச்சி நகரின் மத்தியில் முன்னைய சந்திரன் பூங்கா வளாகத்தில் துப்பாக்கி ரவையொன்று மோதியதால் வெடித்து ஏற்பட்டிருக்கிற இடைவெளியினூடாக தாமரை மலர் ஒன்று மலர்ந்திருப்பதைப்போல வெற்றிச் சின்னம் ஒன்று அமைக்கப்பட்டு அதற்கு அருகில் காவல் அரண் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. பரந்தன் முல்லைத்தீவு வீதியூடாக புதுக்குடியிருப்பிற்குச் செல்லுகிற பாதைக்கு அருகில் சட்டித்தொப்பி அணிந்த இராணுவ சிப்பாய் இலங்கைத் தேசிய கொடியை தூக்கி நிறுத்துவதைப்போன்ற யுத்த களிப்புச் சின்னம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. மேற்சொன்ன யுத்த வெற்றிச் சின்னங்களுக்கு அருகில் உள்ள வீதியூடாகச் செல்லுகின்ற



சிங்கள சுற்றுலாப் பயணிகள் குறித்த சின்னங்களுக்கு அருகில் சென்று புழகாங்கிதத்தோடு ஒளிப்படங்கள் எடுப்பதையும் சமூக வலைத்தளங்களில் பகிர்வதையைம் கண்டிருக்கிறேன். இவை எவற்றை குறிக்கிறது?

28 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்

# மலையக மக்களின் வலியும், வாழ்வும் ஓவியக்கண்காட்சி மலையக மக்களின் வாழ்வுக்கு வலுச்சேர்க்கும்!

(இலங்கையில் பருத்தித்துறை, தெல்லிப்பளை, கிளிநொச்சி, மட்டக்களப்பு, ஹட்டன் ஆகிய 5 நகரங்களில்)








மலையக மக்களின் வலியும் ஓவியப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்கள்.




ஹாட்லி கல்லூரி

ஓவியங்கள் தற்போது குறைந்து, அதற்கு பதிலாக (AI) செயற்கை நுண்ணறிவு ஓவியம் படைக்கும் காலத்தில் ஓவியர் கே.கே. ராஜா முன்னெடுக்கும் இந்த ஓவியக்கண்காட்சி, போற்றுதலுக்கு உரியது. மனித மனங்களின் நேரடிப்பதிவாக, உணர்வின் ஊற்றாக இந்த ஓவியக்கண்காட்சி அமைகின்றது. புலம்பெயர்ந்து வாழும் மக்கள் மலையகம் பற்றி சிந்திக்கும் ஒரு வேளையாக, மலையகம் 200 அமைகின்றது. இந்த எண்ணம் தொடரவேண்டும். எம்மக்கள் என்ற உணர்வுடன், எமது பயணம் எதிர்காலத்தில், மலையக மக்களின் கஷ்டங்களுக்கு கரம் கொடுக்கும். என்ற நம்பிக்கையை இந்த மலையக மக்களின் வலியும்,வாழ்வும் ஓவியக்கண்காட்சி ஏற்படுத்தும் என நம்பலாம்.



மலையக மக்களின் வலியும் ஓவியப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்கள்.

முதல் இடம்: திரு.T.தங்கேஸ்வரன் புசல்லாவை, இரண்டாம் இடம்:திருமதி. R.K.S.கூரோ பேராதனை, மூன்றாம் இடம்:திருமதி.ஹமீரா ரஜீவ் அக்கரைப்பற்று.

## மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பழை

லண்டன் விம்பம். நடாத்தும் மலையகம் 200ஐ முன்னிறுத்தி ஓவியக்கண்காட்சி இன்று 20.10.2023 தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் ஆரம்பமானது. இந் நிகழ்வில் வலிகாம வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன் (இயல்வாணன்) அவர்கள் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். திரு.கரவைதாசனால் ஒழுங்கு செய்யப்பட்ட பார்வையாளர்களுடன், கவிஞர் கருணாகரன், திரு.ரஜாகரன், கவிஞர் சபேசன், ஆகியோருடன் விம்பத்தின் சிற்றேடு திரு முருகவேல் அவர்களால் வெளியிடப்பட்டது. இந் நிகழ்வை கல்லூரி அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் கண்டு மகிழ்வுற்றனர்.

## ஹாட்லி கல்லூரி - பருத்தித்துறை

22.10.2023 ஞாயிறு பருத்திதுறை ஹாட்லி கல்லூரியில் இக்கண்காட்சி இடம் பெற்றது.பிரதம விருந்தினராக ஹாட்லி கல்லூரி முன்னாள் அதிபர் ஸ்ரீபதி முருகுப் பிள்ளை அவர்களும், இன்றைய அதிபர் திரு.த.கலைச்செல்வன், ஹாட்லி கல்லூரி சித்திர ஆசிரியர் திரு.சுதேஷ் கிருஷ்ண பிள்ளை ஆகியோருடன் மாண வர்கள் கலையாவலர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர். தாயகத்தில் வெற்றிமணியின் செயற்பாட்டாளர்கள்,திரு.தெய்வேந்திரன். திருமதி.சாந்தி தெய்வேந்திரன் ஆகியோர் கலந்து, மகிழ்ந்தனர்.

போட்டியில் வெற்றி பெற்ற படைப்பாளிகளுக்கு பரிசளிப்பு நிகழ்வும், ஓவியக் கண்காட்சியும், நூல் அறிமுக, விமர்சன, கலந்துரையாடல் நிகழ்வுகளும் இடம்பெற்றன. இலங்கையில் பருத்தித்துறை,தெல்லிப்பளை, கிளிநொச்சி, மட்டக்களப்பு, ஹட்டன் ஆகிய 5 நகரங்களில் 10 நாட்கள் நடைபெற்றன.







மகாஜனக் கல்லூரி

டொட்முண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்
வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag
கீபோர்ட் (Keyboard)
18:00–19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாபம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde
தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
16:00–17:45
Free
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen
தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3
யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
19:15– 20:15
6€ Pro Stunde
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும் யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்



# சமச்சீரான உணவே நல்வாழ்வற்கு உகந்தது

## இலங்கையர்கள் அனைவருமே உப்புப் பிரியர்களாக இருக்கிறோம்.

'பச்சை மிளகாய் சம்பல் நல்ல ரேஸ்டாக இருக்கு' - சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிட்டார் அவர். கடுகு போட்டு தாளித்தபச்சை மிளகாய்த் தேங்காய் சம்பலை வெள்ளைமா இடியப்பத்துடன் சேர்த்து அள்ளி வாயில் போட்டு சுவைத்தார். இவருடன் சேர்ந்து இருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த மனைவியும் மகளும் அவர் சொன்னதைக் கேட்டு ஆச்சரியத்துடன் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்தார்கள்.

'இந்த மனுசனுக்கு நாக்கு கெட்டுப் போச்சு' என்றாள் மனைவி. 'கடைக்காரன் உப்பை அள்ளிப் போட்டிட்டான் போல கிடக்கு' என மகள் மனம் நோகாம் கொமன்ட் பண்ணினாள். மொழி மத வேறுபாடுகளைக் கடந்து இலங்கையர்களான நாம் அனைவருமே உப்புப் பிரியர்களாக இருக்கிறோம். தினசரி உட்கொள்ளக் கூடிய உப்பின் அளவானது 3.75 முதல் 5 கிராம் மட்டுமே இருக்க வேண்டும் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருந்தபோதும் நாங்கள் 12.5 கிராம் வரை உட்கொள்கிறோம்.

இலங்கையில் ஆண்கள் பெண்களை விட அதிகமாக உப்பை உட்கொள்கிறார்கள் என இலங்கை சுகாதார அமைச்சு வெளியிட்ட ஒரு அறிக்கையில் தெரிவித்திருப்பதை இவ்விடத்தில் ஞாபகப்படுத்தலாம். முக்கியமாக 20 முதல் 60 வயதுவரையான ஆண்கள் அவர்கள் நகர்புறத்தைச் சார்ந்தவர்களானாலும் சரி கிராமங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி அதிகமாக உப்பை உள்ளெடுக்கிறார்களாம்.சோற்றுக்கு உப்புப் போட்டுச் சமைப்பதும் கறிகளுக்கு உப்பும் உறைப்பும் செழிக்கப் போடுவதும் எமது தேசத்தின் பழக்கம். அதற்கு மேல் கடையில் வாங்கும் துரித உணவுகள் உப்பைத் தாரளமாகக் கொட்டித் தயாரிக்கப் படுகின்றன.

கிழக்கு ஆசிய நாட்டவர்களான நாம் மேலைத் தேசத்தவர்களை விட அதிகம் உப்பை உண்கிறோம் என்பதும் குறிப்பிடத்தக்கது. உப்பு என்பது NaCl.அதிலுள்ள சோடியம் (Na) எனும் கனிமம்தான் பாதகங்களுக்கு முக்கிய பங்களிக்கிறது உப்பை அதிகம் உட்கொண்டால் பிரஷர் வரும் ஏற்கனவே பிரஷர் உள்ளவர்களுக்கு மேலும் அதிகரிக்கும் என்பது எல்லோருக்குமே தெரிந்த செய்திதான். அதே நேரம் தினசரி 12 கிராம் உப்பை உட்கொண்டவர் அதனை 3 கிராம் ஆகக் குறைத்தால் பிரசரானது 3.6 முதல் 5.6 ஆல் குறையும் என ஆய்வுகள் சொல்லுகின்றன. ஆனால் அதிக உப்பானது மாரடைப்பு மற்றும் பக்கவாதம் வருவதற்கான சாத்தியத்தையும் அதிகரிக்கும் என்பது பலரும் அறியாத செய்தியாக இருக்கலாம்.

உப்பு அதிகரிப்பதால் பிரஷர் அதிகரிக்கும். அதனாலதான் மாரடைப்பு பக்கவாதம் ஆகியன வரும் என நீங்கள் எண்ணலாம். ஆனால் பிரஸர் அதிகரிப்பதால் மட்டும் இவ் ஆபத்துக்கள் வருவதில்லை. அதீத உப்பு நேரடியாகவே இரத்தக் குழாய்களிலும் இருதயத்திலும் பாதிப்புகளை ஏற்படுத்தி மாரடைப்பையும் பக்கவாதத்தையும் கொண்டு வரும் என்கிறார்கள் மருத்துவ ஆய்வாளர்கள். ஆனால் உட்கொள்ளும் உப்பின் அளவை 12 கிராமிலிருந்து 3 கிராம் ஆகக் குறைத்தால் பக்கவாதம்



வருவதற்கான சாத்தியம் நாலில் ஒரு பங்காலும் இருதய நோய்கள் வருவதற்கான சாத்தியம் மூன்றில் ஒரு பங்காலும் குறையும் என்ற நல்ல செய்தியையும் ஆய்வுகள் கூறுகின்றன.


அதீத உடல் எடைக்கு தவறான உணவு முறைதான் காரணம் என்ற போதும் கூடுதலாக உப்பு உட்கொள்வதும் ஒரு காரணமாகும். எண்ணெய். கொழும்பு இனிப்பு மற்றும் மாப் பொருட்களை அதிகம் உட்கொள்வதே தவறான உணவு முறை என நாம் பொதுவாகக் கருதினாலும் அதிகமாக உப்பை உட்கொள்வதும் அதில் சேர்த்தியே. உப்பை அதிகம் சேர்த்தால் தாகம் அதிகமாகும். தாகம் அதிகமாவதால் இனிப்புள்ள பானங்களை அடிக்கடி அருந்துவதும் எடை அதிகரிப்புக்கு ஒரு காரணமாகிறது. முக்கியமாக குழந்தைகள் நொறுக்குத் தீனிகளை அடிக்கடி சாப்பிடுகிறார்கள். இவற்றில் உப்பு அதிகம். இதனால் ஏற்படும் தாகத்தைத் தணிக்க மென் பானங்களையும் னிப்புள்ள ஜுஸ் வகைகளையம் குடிக்கிறார்கள். இதானால் எடை அதிகரித்து குழந்தைகள் குண்டாகிறார்கள்.

'இவன் சாப்பிடுறதே இல்லை ஆனால் குண்டாகிறான்' என அம்மாமார் சொல்வதுண்டு. அதற்கான காரணம் இப்பொழுது புரிகிறது அல்லவா?

இரைப்பை புற்றுநோய் ஓஸ்டியோ பொரோசிஸ் சிறுநீரகக் கற்கள் ஆஸ்த்மா பாதிப்பு தீவிரமடைதல் போன்ற பல பிரச்சனைகளுக்கும் உப்பு காரணமாக இருக்கிறது என்பதை மறக்காதீர்கள். 'இவருக்கு பிரஷர் என்றபடியால் நான் உப்பே போட்டு சமைப்பதில்லை' என்றார் ஒரு இல்லத்தரசி. அவ்வாறு சமைப்பது நல்லதா கூடாததா என்பதையிட்டு பிறகு பார்க்கலாம். ஆனால் அவள் உப்பு போடாவிட்டாலும் கூட வேறு பல வழிகளில் அதீத உப்பு வேறு உணவுகள் வழியாக அவரையும் எங்களையும் சென்றடையும் என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும்.இன்று உணவு என்பது முற்று முழுதாக வீட்டு உணவு அல்ல. உணவகங்களில் கிடைக்கும் உணவுகளை அடிக்கடி உட்கொள்ள நேர்கிறது.

அவற்றில் உப்பு அதிகமாகவே இருக்கிறது. அதற்கு மேலாகபதப்படுத்தப் பட்ட உணவுகளையும் உண்ண நேர்கிறது. அவற்றில் பெரும்பாலும் உப்பின் செறிவு அதிகமாகவே இருக்கிறது.


28 ஆம் பக்கம் பார்க்க...



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்





அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்



# விடியல் திரைப்படம்









தாய்மண்ணில் நல் படைப்பாளர்களாக, இருந்தவர்கள், அறிவாளர்கள், பலர் புலம் பெயர்ந்து,மொழி புரியா நாடுகளில், வெங்காயம் உரித்து,சமையல் செய்து 26 வருடம் தங்கள் கனவுகளையும், தங்களது தளங்களையும், தொலைத்து பட்டமரமாகி, அதிலும் துளிர் விடும் ஆசைகள், கனவுகளுடன் காய்ந்தும் கரைந்ததும், போகும், அன்றைய இரு இளைஞர்களின் கதை விடியல்.

இன்று வயது முதிர்ந்து முதியவராய், வேலை செய்யும் இடத்தில், மாடகவும் தம் அளவில் மகான்களாகவும், இருந்து, இறுதியில் விறகாகி, ஒரு விடியலுக்கு காத்திருக்கும் படம். எழுத்து, இயக்கம். க.ஆதவன், தா.பாலகணேசன், அரவிந் அப்பாத்துரை.

பல தத்துவங்கள் வருகின்றது, அவை வந்து போகவில்லை, எம் மனதில் விதைக்கப்படுகின்றது.

### ஒரு எலிக்கதை

மண்ணில் பொந்துக்குள் தலைவைத்து எலி தேடியவன். கனநேரம் அப்படி இருக்க. ஓடி போய் அவன் காலை இழுத்தால், அவன் தலையைக் காணோம். அவனுடன் வந்தவனுக்கு ஒரு சந்தேகம், அவர் வேட்டைக்கு வருபோதே அவனுக்கு தலை இருந்ததா? சரி அவன் மனைவிக்கு தெரிந்திருக்கும் கேட்போம், என்று அவன் மனைவியிடம், உன் கணவன் வேட்டைக்கு வரும்போது தலை இருந்ததா? அவள் தனக்கும் நினைவு இல்லை, ஆனால், அவருக்கு தொப்பி என்றால் நல்ல விருப்பம். எப்பவும் எங்கு கண்டாலும் தொப்பிகள் வாங்குவார். இப்படி ஒரு தத்துவம் நகர இன்னும் ஒன்று தத் துவ ஞானிகள் பற்றி. தத்துவ ஞானிகள் உண்மையை பாதுகாக்கும் நாய்கள். அதாவது உண்மை, வெளியே வராமல் பார்க்கும் நாய்கள் தத்துவ ஞானிகள் என்கிறார். இப்படி பல விதைகள் விதைக்கப் படுவதை, இந்த விடியலில் காணலாம்.

ஒளிப்பதிவு கமரா முகத்துக்கு வைக்கப்படவில்லை. அங்கு நடக்கும் சம்பவங்களுக்கு வைக்கப்பட்டு இருந்தது. மனித முங்களைவிட பொருட்கள் பல பொருள்கள் சொல்ல, இந்தக் கமார எல்லா மொழியும் பேசியது. சில காட்சிகள் நீண்டு இருந்தது. ஆனால் அதனால் ஏற்படும் சலிப்பு கதாபாத்திரங்களின் வாழ்க்கை சலிப்போ என எண்ணவைத்தது. மொத்தத்தில் பல பொருள் தரும் ஒரு படம். ஒரு படத்தை நீங்கள் பார்த்தபின் எல்லோருக்கும் ஒரே படமாக தெரியாது.பல கதைகளாக ஒவ்வொருவருக்கும் இது விரியும்.அதனால் இந்த விடியல் பலருக்கு பல விடியலைக் கொடுக்கும் என நம்பலாம்.பார்க்கவேண்டிய படம். உங்களை நீங்களும், அங்கு அடிக்கடி கண்டுகொள்வீர்கள்.காரணம் இது புலம் பெயர்ந்து வாழும் உங்கள் கதை..விடியல் திரைப்படம் விரைவில். காத்திருங்கள்.







# திருமதி தணிகா கிருபாபரணன் சுப்பிரமணியத்திற்கு திருமுறைத் திருமகள் விருதைத் தமிழக ஆளுநர் மேதகு ஆர்.என். இரவி வழங்கங்கினார்

திருமதி தணிகா கிருபாபரணன் சுப்பிரமணியம். இலங்கை வேலணை கிழக்கில் பிறந்தவர். (07.03.1980). Bonn-Rhein- Sieg பல்கலைக்கழகத்தில் உயிரியல் இளநிலை அறிவியல் பட்டதாரி (2009). தமிழ் ஆங்கிலம் யேர்மன் மொழிகளில் புலமையாளர்.2017- பாவலர், கம்பன் கழகம் பிரான்சு- பிரான்சு கம்பன் கழகப் பொருளாளர்.

பன்னிரு திருமுறைகளுள் யேர்மன் மொழிக்கு மொழிபெயர்ப்பான நூல் திருவாசகம். Die Hymnen Des Manikka-Vašaga Tiruvašaga என்ற தலைப்பில் யேர்மனுக்கு 1923 இல் மொழிபெயர்த்தவர் Hilko Wiardo Schomerus (07.01.1879 - 13.11.1945). இந்த மொழிபெயர்ப்பைத் தேடுக, இக்காலத்துக்கு ஏற்றவாறு பதிப்பிக்க உதவுக எனப் பன்னிருதிருமுறை மின்னம்பலப் பணிகள் மற்றும் பல்மொழி மொழிபெயர்ப்பு ஒருங்கிணைப்பாளர் மறவன் புலவு






க.சச்சிதானந்தன் கேட்க,யேர்மன் திருவாசகத்தின் பழைய பதிப்பின் 658 பாடல்களை புதிய நூலாக்கியவர். முதலாம் திருமுறையில் பல பதிகங்களை யேர்மன் மொழிக்கு மொழிபெயர்த்தவர் ஆதலால், தருமபுரம் ஆதீனம் 26ஆவது 27ஆவது குருமகாசந்நிதானங்களின் முழுமையான ஆசிகளைப் பெற்றவர். பன்னிரு திரு முறைகளை யேர்மன் மொழியில் தருகின்ற அரும்பெரும் பணிக்காக இன்று, சோபகிருது, புரட்டாதி 7, சனிக்கிழமை (23.09.2023) இந்தியா, தமிழ் நாடு, சென்னை, கிண்டி, மேதகு ஆளுநர் மாளிகை, பாரதியார் மண்டபத்தில் திருமதி தணிகா கிருபாபரணன் சுப்பிரமணியம் அவர்களுக்குத் திருமுறைத் திருமகள் விருதைத் தமிழக ஆளுநர் மேதகு ஆர். என். இரவி அவர்கள் மகிழ்ந்து வழங்கிப் பாராட்டி வாழ்த்திச் சிறப்பிக்கிறார்கள்.

பன்னிருதிருமுறை மின்னம்பலப் (www.thevaaram.org) பணிகள், 12 மொழிகளுக்கு மொழிபெயர்ப்புப் பணிகள், ஒருங்கிணைப்பாளர் மறவன்புலவு க.சச்சிதானந்தன்

# வீடு தலைகீழாய்க் கிடக்கு

மாதவி

கொஞ்சநேரம் நான் வீட்டில் இல்லை என்றால் போதும், வீடு தலைகீழாக்கிடக்கும்.

வீடுகட்ட வெளிநாட்டில் இருந்து காசு அனுப்பி, வந்துபார்த்தால் நான் நினைத்ததுக்கு,தலைகீழாக வீடு கட்டிவைத்திருக்கிறான்.

இப்படியாக வீடு தலைகீழாய்க்கிடக்கு என்பதன் அர்த்தம் வேறு வேறு.

ஆனால். இங்கு நேராகவே அர்த்தம் தலைகீழ் வீடுதான். உண்மையாகவே தலைகீழாக கட்டப்பட்ட வீடு இது.

அட தலைகீழாக கட்டப்பட்ட ஒரு வீடு வெளியில் நின்று பார்த்தால் அப்படியே தலைகீழாக வீடு தெரியும்.





கட்டிடக்கலையில்,ஒற்றைத்தூணில், வீடு, மரத்தின் உச்சியில் வீடு, மலையின் உச்சியில் வீடு, கடலின் நடுவே வீடு, இப்படி புதுமை படைக்வேண்டும் என எண்ணும் மனித மூளையில் உதித்தது தான் இந்த தலைகீழ் வீடு.

இது துருக்கியில் அன்ராலியா மாகாணத்தில் அமைந்துள்ளது.

இதுபோல் பல நாடுகளில் அமைந்திருந்தாலும், இந்த தலைகீழ் வீட்டையே நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்கு கடந்த 6.10.2023 கிடைத்தது.

ஒரு படம் வெளியே நின்று, அந்த வீடு தலைகீழாக இருப்பதை எடுத்தாச்சு. இனி ஏன் உள்ளுக்குள் சென்று எதைப் புதிதாகப் பார்க்கப் போகின்றோம்? என்ற எண்ணம் வீடு பார்ப்பதற்கான அனுமதிச் சீட்டைப் பெறும் போது யாவருக்கும் தோன்றும். (ஒருவருக்கு 12€ ) அரை மனத்துடன் படி ஏறி உள்சென்றால், ஒரு வீடு கட்டப்பட்ட பின் தலைகீழாக மாற்றினால் எவ்வாறு இருக்குமோ. அதுபோல் ஒவ்வொன்றையும்,கட்டில், முதல் பாத்ரூம் வரை அணுவளவும் விலகாமல் சிறப்பாக யாவற்றையும், தலைகீழாக அமைத்து இருந்தனர்.



இங்கு தலைகீழாக தொங்கும், கதிரை, கட்டில், மேசை இந்த வீட்டை தலைகீழ் என உணர்த்துவது, ஒரு புறம் என்றால், மறுபுறம் கண்ணை மூடி நடந்தாலும் அதே உணர்வு ஏற்படும் வண்ணம். அதாவது தலைகீழாக நடப்பது போல் இருக்க வீட்டின் தளம் சரிவாகவும் அமைக்கப்பட்டு உள்ளது. எனவே தட்டுத் தடுமாறி நடக்கவேண்டி உள்ளது. இது நாம் தலைகீழாக இருக்கும் உணர்வைத்தருகின்றது.

மேலே தொங்கும் ஒரு பொருளைத் தொட்டபடி, படம் எடுக்கவும், பின் அப்படத்தை, தலைகீழாக மாற்றுங்கள், நீங்கள் தலைகீழாக நிற்பதுபோல் படம் வரும். சின்ன வயதில் தலைக்குத் தலையணையை வைத்துத் தலைகீழாக நின்ற ஞாபகம் எனக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் வரும்.

இங்கு நான் தலைகீழாக நிற்கும் படம், அங்கு நேராக எடுத்து தலைகீழாக மாற்றிய படமே.

புலம் பெயர் நாட்டில் வாழும் பலர் தாயகத்தில் பெரிய வீடுகளைக் காட்சிக்குக் கட்டிவிட்டு, வெளிநாடுகளில் வெறுங்கனவுகளுடன் வாழ்கின்றார்கள், அவர்கள் இப்படி சில தலைகீழ் வீடுகள்,அல்லது புதுமையான வீடுகளைக் கட்டி, உல்லாசப் பயணிகளது வரவைத் தூண்டலாம். எமது மாகாணங்களின் வரவும் அதிகரிக்கும்.

கடல், நீர்வீழ்ச்சி என இயற்கை அழகு இல்லாத நகரங்களில் இப்படி செயற்கையாக மக்களை கவரும் முயற்சியில் நாமும் ஈடுபடலாம். ஆனால் நம்மவர்கள் எத்தனைபேர் இதனைத் தாய்நாட்டில் பார்ப்பார்கள், அதனை ஊக்குவிப்பார்கள், என்பது பெரும் கேள்விதான்.





அதற்கு பதிலாக யாரும் அறியும் வண்ணம் அழகுபடுத்தப்பட்ட யாழ்ப்பாணத்தில் ஆரிய குளம்,இன்று அனாதையாகக் கிடக்கிறது என்பதும் உண்மைதான். நமது மனங்களும் மாறவேண்டும். இரசனை வளரவேண்டும். ■

படங்கள். வெற்றிமணி

தமிழ் எங்கள்
உயிரின் இருப்பு

லிவர்ப்பூல் தமிழ்க்கல்விக்கூடம்
Liverpool Tamil Kalvikkoodam

EST: 2014

Opening Time;
Saturday's between 1:30 PM and 5 PM.

Telefon: 07723 957543


இனிய தீபத் திருநாள் வாழ்த்துகள்

THE DE LA SALLE ACADEMY, Carr Ln E, Croxteth , Liverpool L11 4SG, UK

# திரு.க.அருந்தவராஜா அவர்களின் 'தமிழர்களின் வலியும் வரலாறும்' நூலின் வெளியீட்டு விழாவும் மண் சஞ்சிகை ஆசிரியர் திரு.வைரமுத்து சிவராசா அவர்களுக்கான பாராட்டுவிழாவும்

யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடாத்திய எழுத்தாளர், கவிஞர் திரு.க.அருந்தவராஜா அவர்களின் புலம்பெயர்ந்த தமிழர்களின் வலியும் வரலாறும் என்ற நூலின் வெளியீட்டு விழாவும் திரு வைரமுத்து சிவராசா அவர்கள் ஐம்பது வருட கால எழுத்துப்பணி பாராட்டும் விழாவும் 14.10.2023 சனிக்கிழமை மாலை டோர்முண்ட் தமிழர் அரங்கில் நடைபெற்றது. எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு சிறீஜீவகன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

முதலில் புலம் பெயர்ந்த தமிழர்களின் வலியும் வரலாறும் என்ற நூலின் வெளியீடு விழா நடைபெற்றது. நூலின் முதற்



பகுதியான ஆசிய நாடுகள் பற்றி எழுத்தாளர் சங்கச் செயலாளர், எழுத்தாளர், திரு. சி சிவவினோபன், இரண்டாம் பகுதியான ஆபிரிக்க நாடுகள் பற்றி மொழிப்பற்றாளர் திரு. பா.காந்தரூபன், மூன்றாம் பகுதியான ஓசானியத்தீவுகள் பற்றி சங்கீத, நடன கலாஜோதி, செல்வி கார்த்திகா சிவபாலன், நான்காம் பகுதியான கரிபியன் தீவுகள் பற்றி பன்னாட்டுபுலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத் தலைவர், எழுத்தாளர், திரு.சபேசன் ஆகியோர் சிறப்புப் பார்வை செய்திருந்தார்கள்.

தொடர்ந்து நூலாசிரியர், கவிஞர் அருந்தவராஜா அவர்கள் நூலை வெளியிட முதல் பிரதியை சமூகபற்றாளர், கோபரா ஞானம் புடவை வியாபார நிலைய உரிமையாளர் திரு.ஞானம் அவர்கள் பெற்றுக்கொண்டார். சிறப்புப்பிரதியை அறிவிப்பாளர் திரு.ரமேஸ்வரன் அவர்கள் பெற்றுக் கொண்டார். பின்னர் சபையோர் நூல்களை பெற்றுக்கொண்டனர். அடுத்து மண் சஞ்சிகை ஆசிரியர் திரு.வை. சிவராசா அவர்களும், மூத்த அறிவிப்பாளர், திரு.முல்லைமோகன் அவர்களும் வாழ்த்துரைகள் வழங்கினார்கள். இதனைத் தொடர்ந்து நூலாசிரியர் தன் நூலாக்கம் பற்றிய தகவல்கள், சிறப்புரையாற்றியவர்களின் கருத்துகளிற்கு பதிலகள் என ஏற்புரையை வழங்கி மகிழ்ந்தார்.

அப்பொழுது எழுத்தாளர் சங்கத்தினர். பொன்னாடை அணிவித்தும், நினைவு பட்டயம் வழங்கியும் ஆசிரியரை கௌரவித்தனர். நிகழ்வை திருமதி சாந்தினி துரையரங்கன் தொகுத்து வழங்கினார்.







# மண் சஞ்சிகை ஆசிரியர் திரு.வைரமுத்து சிவராசா அவர்களுக்கான பாராட்டுவிழா

இரண்டாது நிகழ்வாக மண் சஞ்சிகை ஆசிரியர் திரு. வை.சிவராசா அவர்களுக்கான பாராட்டுவிழா நடைபெற்றது. முதலில் வடிவமைப்பாளர் சிவவினோபனின் தொழில்நுட்ப வித்தையில் உருவாக்கிய ஆசிரியர் பற்றிய காணொளி காண்பிக்கப்பட்டது.

மங்களவிளக்கேற்றல், அகவணக்கம், தமிழ்தாய் வாழ்த்து, வரவேற்பு நடனம், வரவேற்புரை, தலைமையுரையைத் தொடர்ந்து, அடுத்து யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பாக வாழ்த்துப்பாவை எழுத்தாளர் சங்க உபதலைவர், ஆசிரியர், கவிச்சுடர் அம்பலவன் புவனேந்திரன் வாசித்தார். தொடர்ந்து ஆசிரியரின் பணிகளைப் பாராட்டி வாழ்த்துரைகள் தொடர்ந்தன. பன்னாட்டுத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் உபதலைவர், ஐரோப்பியத் தமிழ் வானொலி இயக்குனர்,அகரம் சஞ்சிகை ஆசிரியர் திரு.த.ரவீந்திரன் அவர்கள் ஆரம்ப காலங்களில் ஆசிரியர் பட்ட கஸ்டங்களை எடுத்துக்கூறினார்.

ஆசிரியரின் மண்சஞ்சிகை பற்றி திருமதி.கெங்கா ஸ்ரான்லி,ஆசிரியரின் பணிகள் பற்றி,எழுத்தாளர், திரு. பொலிகை ஜெயா,ஆசிரியரின் மனிதநேயப்பணிகள் பற்றி ஆசிரயர் சாந்தினி துரையரங்கன் எழுத்துப்பணிகள், ஆசிரியரின் பண்புகள் பற்றி எழுத்தாளர், கவிஞர், திருக. அருந்தவராஜா ஆகியோர் வழங்கியிருந்தார்கள். அடுத்து யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்க செயற்குழு உறுப்பினர்களால் ஆசிரியர் திரு.வை.சிவராசா அவர்களின் 50 வருட ஊடக எழுத்துப்பணியைப் பாராட்டி பொன்னாடை அணிவித்து மதிப்பளித்தனர். திருமதி இராஜேஸ்வரி சிவராசா அவர்களுக்கும் மதிப்பளித்தனர்.

மண் சஞ்சிகை இளம் எழுத்தாளர் சாமினா சிவதாசன், கவிஞர் திருமதி கீத்தாராணி பரமானந்தன், இயக்குனர் திருமதி சிபோ சிவகுமாரன்,கவிஞர் திரு.சிறீகந்தராஜா,எழுத்தாளர் திருமதி இந்திரா மகாலிங்கம், மூத்த அறிவிப்பாளர்திரு.முல்லைமோகன்,கவிஞர். திரு.சுப்பிரமணியம்,வைத்தியர்.திரு. காந்தரூபன்,விமர்சகர் திரு.சபேசன், திரு கவிக்கோ பரம விஸ்வலிங்கம், மொழிபெயர்ப்பாளர் திரு.இரகுநா தன், அறிவிப்பாளர் ரமேஸ்வரன் எனப் பலர் வாழ்த்துரைகள் வழங்கினார்கள்.

மண் ஆசிரியர் ஏற்புரையில் ஏற்பாட்டார்களுக்கும், வாழ்த்தியவர்களுக்கும் நன்றி தெரிவித்து உரை நிகழ்த்தினார். சங்கச் செயலாளர் சிவசினோபனின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறை வேறியது. தொகுப்பு சாந்தினி துரையரங்கன்





அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்



# ஆக்கிரமிப்பாளர் VS ஆக்கிரமிக்கப்பட்ட மக்கள்:

# இரண்டையும் ஒரே தட்டில் வைப்பதா?

## பிபிசியிடம் பலஸ்தீனப் பிரதிநிதி கேள்வி



ரூபன் சிவராஜா (நோர்வே)

ஆக்கிரமிப்பு சக்தியாக இருந்தாலும் ஜனநாயக நாடு என்ற போர்வையில் பல நாடுகள் அரச பயங்கரவாதங்களை முன்னெடுத்து வருகின்றன. உலகிலேயே ஆகப்பெரிய அரசபயங்கரவாதத்தை 75 ஆண்டுகளாகப் பலஸ்தீன மக்கள் மீது பிரயோகித்துவரும் நாடு இஸ்ரேல். ஆனால் அமெரிக்காவும் ஐரோப்பாவும் அதற்கு இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் முண்டுகொடுத்து வருகின்றன.

வல்லரசுகளின் அதிகார நலனுக்கு ஊதுகுழலாகவே உலகப் பேரூடகங்கள் செயற்படுகின்றன என்பதை விளக்கிக்கூற வேண்டியதில்லை. அதற்கான மிக அண்மைய உதாரணங்கள் ரஸ்ய – உக்ரைன் போர் மற்றும் இஸ்ரேல் – பலஸ்தீன முரண்பாடு சார்ந்த ஊடக வெளிப்படுத்தல்களைச் சொல்லலாம்.

சில நாட்களுக்கு முன்னர், பிபிசி தொலைக்காட்சியில் (Palestinian National Authority) பலஸ்தீன தேசிய நிர்வாகத்தின் (பாஃதா அமைப்பைச் சேர்ந்த) பிரித்தானியாவிற்கான தூதுவர் Husam Zomtol உடன் பி.பி.சி நடாத்திய ஒரு நேர்காணலைச் சமூக ஊடகங்களிற் காணக்கிடைத்தது. இஸ்ரேல் பொதுமக்கள் மீது ஹமாஸ் ஒக்.7ஆம் திகதி நடாத்திய தாக்குதலை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா என்ற கேள்வியை ஊடகவியலாளர் முன்வைக்கின்றார். 'அது அவசியமற்ற கேள்வி' என்கிறார் Husam Zomtol. தொடர்ந்து தனது நியாயமானதும் தர்க்க ரீதியானதுமான கேள்விகளால் ஊடகவியலாளரைச் சவாலுக்குட் படுத்துகின்றார்.

அவர் மிக இயல்பாக – மிக எளிமையாக – அரசியல் நேர்மையுடனும் – இராஜதந்திரத்துடனும் பதிலளிக்கின்றார். பலஸ்தீன உரிமையை வலியுறுத்திய அதே வேளை, சர்வதேசத்தினதும் – ஊடகப் போக்கினதும் முகத்திரைகளும் ஒருசேரக் கிழிக்கப் படுவதாகவே தோன்றியது.

ஹமாஸின் தாக்குதல் பற்றிய கேள்வி 'பொருத்தமான கேள்வியே அல்ல' என்ற அடிப்படையிற் தனது எதிர்வினையையும் வாதங்களையும் முன்வைக்கின்றார். 'அந்த நடவடிக்கையை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா இல்லையா என்பது முக்கியமான கேள்வியே' என ஊடகவியலாளர் நிறுவப் பிரயத்தனப் படுகின்றார்.

'ஹமாஸ் ஒரு இராணுவக் குழு. நீங்கள் இப்போது பலஸ்தீன மக்களின் பிரதிநிதியோடு பேசுகின்றீர்கள். எமது நிலைப்பாடு நன்கு அறியப்பட்டதும் தெளிவானதும்' என்கிறார். அதற்கும் இடைமறித்து 'ஹமாஸை ஆதரிப்பது உங்கள் நிலைப்பாடா' என்ற தொனியில் கேள்வி முன்வைக்கப்படுகின்றது.

'ஆதரிப்பது, ஆதரிக்காதது, கண்டிப்பது, கண்டிக்காதது அல்ல இங்குள்ள பிரச்சனை. நான் எனது மக்கள் எத்தகைய அவலங்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள்' என்பதைப் பேச வந்துள்ளேன். ஹமாஸைக் கண்டிப்பதாக அவர் வாயால் சொல்லவைப்பதற்கான கடும்பிரத்தனங்களை ஊடகவியலாளர் மேற்கொள்கி ன்றார்.

'அப்படி யாரையேனும் கண்டிக்க வேண்டுமென்றால், அது யாரை நீங்கள் மத்திய கிழக்கின் ஒரேயொரு ஜனநாயக நாடு என்று விளிக்கின்றீர்களோ அதனைத்தான் கண்டிக்க வேண்டும். அதுவே நீங்கள் சற்றுமுன்னர் குறிப்பிட்ட பொதுமக்களை இலக்குவைப்பதைச் செய்து கொண்டிருக்கின்றது. கடைசி 48 மணித்தியாலங்கள் மட்டுமல்ல. 1948இலிருந்து அதனை அது மீண்டும் மீண்டும் செய்து வருகின்றது.

தயவுசெய்து இங்கே ஆக்கிரமிப்பாளர்களையும் ஆக்கிமிப்பிற்கு உட்பட்டவர்களையும் ஒரே தட்டில் வைத்துச் சமப்படுத்தாதீர்கள். அது ஒருபோதும் பார்வையாளர்கள் உண்மைநிலையை விளங்கிக்கொள்வதற்கான நியாயத்தினை வழங்காது. பொது மக்கள் மீதான படுகொலை என்பது இஸ்ரேல் நிறுவப்பட்டதிலிருந்து

22 ஆம் பக்கம் பார்க்க...






அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்





# நடுப்பக்கம்

சேவியர்
(தமிழ்நாடு)

# காதல் மொழிகள் ஐந்து!

“என்ன சொன்னாலும் என் பொண்டாட்டி புரிஞ்சுக்கவே மாட்டேங்கறா“ என புலம்பாத கணவர்களையும், “அவருக்கு என்னிக்கு இதெல்லாம் புரியப் போவுது“ என புலம்பாத மனைவியரையும் கண்டுபிடிப்பது என்பது தும்பிக்கையில்லாத யானையைக் கண்டுபிடிப்பது போல சிரமமானது.

எல்லா தம்பதியருக்குள்ளும் இருக்கும் ஒரு மிகப்பெரிய சவால் இது. புரிந்து கொள்ளக்கூடிய வாழ்க்கைத் துணை அமைந்தால் வாழ்க்கை அற்புதமாக இருக்கும். மனைவியைப் புரிந்து கொள்ளும் கணவனும், கணவனைப் புரிந்து கொள்ளும் மனைவியும் அமைவது இறைவன் கொடுத்த வரம் எனலாம்.

ஆனால் பெரும்பாலான குடும்பங்களில் இந்த புரிதல் இருப்பதில்லை. அதனால் நதிபோல நடக்க வேண்டிய குடும்ப வாழ்க்கை சுனாமி பொல சுருட்டி அடிக்கும். சண்டைகளும், சச்சரவுகளும், ஏக்கங்களும், எதிர்பார்ப்புகளும், நிராசைகளுமாய் தான் பொழுதுகள் கடந்து போகும்.

“குடும்ப வாழ்க்கைன்னாலே அப்படித் தான் பாஸ்.. நாம ஒண்ணும் பண்ண முடியாது. இது நம்மளோட விதி“. என புலம்பும் மக்களைப் பார்த்து கேரி சேப்மேன் சொல்கிறார், “விதி யாவது மண்ணாவது, இந்த சிக்கலையெல்லாம்சரிபண்றதுரொம்ப ஈஸி“.

“சும்மா காமெடி பண்ணாதீங்க சார்“. என நம்பாமல் பார்க்கும் மக்களுக்காக அவர் எழுதிய புத்தகம் தான் “த ஃபைவ் லவ் லேங்குவேஜஸ்“. தமிழில் ஐந்து காதல் மொழிகள் என சொல்லலாம்.

ஒவ்வொரு மனிதனும் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு மொழியோ, சில மொழிகளோ இருக்கும். தமிழே தெரியாத ஸ்பெயின் நாட்டுக்காரனிடம் போய், “சௌக்கியமா இருக்கீங்களா“ என்று கேட்டால் “டே கே ஸ்பெஸ் அவ்லான்டோ“ என்று ஸ்பேனிஷ்வார்கள். “என்ன சொல்றேன்னு எனக்குப் புரியலே“ என்பது தான் அதன் பொருள். எல்லோருக்கும் புரியக்கூடிய மொழியில் பேசினால் தான் அந்த பேச்சுக்கு ஒரு அர்த்தம் உண்டு.

உரையாடலின் அடிப்படை இது தான். பேசுபவர் எளிமையாய் பேசவேண்டும், கேட்பவர் முழுமையாய் உள்வாங்க வேண்டும். அவ்வளவே.

“கரடியா கத்தறேன்.. கேக்குதா பாரு“ என கத்தினாலும் புரியாத மொழியில் பேசினால் புரியாது தான் ? இந்த விஷயத்தைத் தான் அவர் தனது நூலில் எழுதியிருக்கிறார். அந்த நூல் சாதாரண நூல் இல்லை. ஒரு கோடி பிரதிகள் விற்றுத் தீர்ந்த நூல். அமெரிக்காவின் அதியுச்ச விற்பனையில் பல ஆண்டுகள் இருந்த நூல். உலகெங்கும் சுமார் ஐம்பது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு கொண்டாடப்பட்ட நூல்.



அதெப்படி சாத்தியம் ? அவ்வளவு பெரிய அப்பாடக்கரா அந்த ஆசிரியர் என தேடினால் கிடைக்கும் விஷயங்கள் சுவாரஸ்யமானது. உளவியலில் டாக்டர் பட்டம், கலையில் முதுகலைப்பட்டம், ஆன்மீக கற்பித்தல் பிரிவில் முதுகலைப்பட்டம் என வாங்கி அடுக்கியவர். சுமார் முப்பது ஆண்டுகள் குடும்ப கவுன்சிலிங் துறையில் முழுமையாக ஈடுபட்டவர், என கிடைக்கின்ற தகவல்கள் அவருடைய நூல் மீதான மரியாதை உயர்த்துகிறது.

## அப்படி என்ன தான் சொல்கிறார் ?

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு காதல் மொழி உண்டு. ஒரு தாய்மொழியோடு கூட கொசுறாய் இன்னொரு மொழி இருப்பது போல இரண்டாவது காதல் மொழி ஒன்றும் இருக்கும். மூன்றாவது மொழி கூட சிலருக்கு இருக்கலாம். ஆனால் முதல் இரண்டு மொழிகளும் தான் மிக முக்கியமானவை.

உங்கள் வாழ்க்கைத் துணைக்கு எந்த காதல் மொழி புரியும் என்பதைக் கண்டு கொள்வதில் இருக்கிறது வாழ்க்கையின் வெற்றி. அப்படிக் கண்டு கொண்டால் அதன்பின்னர் நீங்கள் அந்த மொழியில் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் பேசலாம். உங்கள் குடும்ப உறவு நெருக்கமாய் வளரும்.

## அப்படி என்னென்ன காதல் மொழிகள் ?

1. பாராட்டு வார்த்தைகள்
2. தரமான நேரம்
3. பரிசு பெறுதல்
4. ஒத்தாசை விரும்புதல்
5. தொடுதல்

இந்த ஐந்தும் தான் அந்த காதல் மொழிகள். இந்த ஐந்து மொழிகளில் உங்கள் வாழ்க்கைத் துணைக்கு எந்த மொழி புரியும் ? எந்த மொழி பிடிக்கும் ?

17 ஆம் பக்கம் பார்க்க...



# காதல் மொழிகள் ஐந்து!



### 1. பாராட்டு.

சிலருக்கு வார்த்தைகள் மிக முக்கியம். காதலாகிக் கசிந்துருகும் மனம் கணவனுக்கு இருந்தாலும், “நீ ரொம்ப அழகா இருக்கே செல்லம்“ என கணவன் ஒரு முறை செல்லமாய்ப் பேசுவதை மிகவும் விரும்புவார்கள். அவர்களுக்கு அடிக்கடி அவர்களுடைய செயல்களைப் பாராட்டுவதோஇ அவர்களுடைய குணாதிசயங்களைப் பாராட்டுவதோ, அல்லது உறவு நிலையை பாராட்டுவதோ, தோற்றத்தைப் பாராட்டுவதோ மிகவும் உற்சாகமளிக்கும்.

உங்களுடைய வாழ்க்கைத் துணையின் காதல் மொழி பாராட்டு எனில், உங்களுடைய வாழ்க்கை அதைச் சுற்றி இருக்க வேண்டும். மனைவி வைக்கும் மீன் குழம்பு சூப்பராக இருக்கிறதென ரெண்டு சட்டி குழம்பை காலி பண்ணுவதோடு நின்று விட வேண்டாம். “நீ மீன் குழம்பு வெச்சா மீனுக்கே நாக்குல எச்சில் ஊறும்“ நு ரெண்டு பாராட்டு வாக்கியத்தையும் சேர்த்து சொல்லுங்க, வாழ்க்கை அமோகமா இருக்கும்.

### 2. தரமான நேரம்

தரமான நேரம் என்பது ஸ்பெஷலாய் உங்கள் வாழ்க்கைத் துணைக்கு மட்டுமாக நீங்கள் ஒதுக்கும் நேரம். அது டின்னர் முடிந்தபின் மொட்டை மாடியில் போய் அமர்ந்து பேசும் நேரமாய் இருக்கலாம். சாயங்காலம் காலார நடந்து போய் இயற்கையை ரசிக்கும் நேரமாய் இருக்கலாம். அல்லது ஒரு காபி ஷாப் போய் ஒற்றைத் தேனீரை ஒன்றரை மணி நேரம் குடிக்கும் சமயமாகவும் இருக்கலாம். செல்போனை மூர்ச்சையாக்கி, வேறெந்த கவனச் சிதறலுக்கும் இடம் கொடுக்காமல் இருப்பது தான் தரமான நேரம்.

நாலுமணி நேரம் கிரிக்கெட் பார்த்து விட்டு, “காலைல இருந்தே வீட்ல தானே இருக்கேன்“ இதை விட வீட்டுக்கு என்ன நேரம் செலவிடணும் என கேட்பது இதில் சேராது.



இங்கே மனம் விட்டுப் பேசுவதும், மனம் திறந்துக் கேட்பதும் தான் பிரதானம். பெரும்பாலும் பெண்களுக்கு இந்த காதல் மொழி தான் தேவையாக இருக்கும். அத்தகைய வாழ்க்கைத் துணை உங்களுக்கு அமைந்தால் நீங்கள் அவர்களோடு அதிக நேரம் செலவிட வேண்டும். அதை விட்டு விட்டு வேறென்ன செய்தாலும் அவர்கள் திருப்தியடைவதில்லை.

### 3. பரிசு

சிலருக்கு பரிசுகள் பெறுவது ஆனந்தமாய் இருக்கும். அந்தப் பரிசின் விலை முக்கியமல்ல, ஆனால் அது கணவனிடமிருந்து கிடைக்கிறது, அல்லது மனைவியிடமிருந்து கிடைக்கிறது எனும் சிந்தனை தான் பெரிது. ஒரு காட்பரீஸ் சாக்லேட்டாகவோ, நாலுசவரன் சங்கிலியாகவோ எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்.

எதிர்பாராத நேரத்தில் நீட்டும் ஒரு சின்னப் பரிசு அவர்களை திக்கு முக்காட வைத்து விடும். உறவில் இருக்கும் விரிசலிலெல்லாம் அது சட்டென காங்கிரீட் போட்டு அடைத்து விடும். பரிசு என்பது, “நான் உன்னை நேசிக்கிறேன், நான் உன்னை நினைக்கிறேன்‘ என்ப தன் வெளிப்பாடாய் அவர்கள் புரிந்து கொள்வார்கள். உங்கள் வாழ்க்கைத் துணையின் காதல் மொழி பரிசு எனில்இ அதை அடிக்கடி, வித்தியாசம் வித்யாசமாய் கொடுங்கள். தப்பித் தவறி கூட அவர்களுடைய பிறந்த நாள், திருமண நாள் உட்பட எந்த ஸ்பெஷல் டேயையும் பரிசு இல்லாமல் செலவிடாதீர்கள்.

### 4. ஒத்தாசை

சிலருடைய காதல் மொழி “ஒத்தாசை“ எதிர்பார்ப்பது. வேலையில் கூட மாட ஹெல்ப் பண்ணினால் சந்தோசப்படுவார்கள். உங்கள் மனைவியின் காதல் மொழி இதுவானால், “காய்கறி வெட்டவா ?“ என கேட்டால் அவர்கள் ரொம்ப சந்தோசப்படுவார்கள். அழுக்காய் கிடக்கும் துணிகளை அள்ளி வாஷிங் மெஷினில் போட்டால் சிலிர்த்து போவார்கள். காயப் போட்ட துணிகளையெல்லாம் எடுத்து அடுக்கி வைத்தால் மகிழ்ந்து போவார்கள்.



அன்புடன் உதவி செய்ய தயாராய் இருப்பதே முக்கியம். இதை சும்மா ஒரு கடமைக்காகச் செய்யக் கூடாது. ஆத்மார்த்தமான அன்புடன் செய்ய வேண்டும் என்பது மிகவும் முக்கியம். இந்தக் காதல் மொழி உடையவர்களிடம் போய் “நீ சூப்பரா காய்கறி வெட்டுறே“ என பாராட்டு மொழி சொன்னால் “ஆமா... வெட்டியா இருந்துட்டு கருத்து சொல்ல வந்துட்டாரு...“ என வெடிப்பார்கள்.

### 5. தொடுதல்

தொடுதல் என்பது தாம்பத்ய உறவு மட்டுமல்ல. வீட்டில் தினசரி நடக்கும் செயல்களில் கணவன் மனைவியிடையே இருக்கின்ற சின்னச் சின்ன அன்பின் தொடுதல்களை, பாராட்டின் தொடுதல்களை, சில்மிஷத் தொடுதல்களை எல்லாம் இதில் சேர்த்துக் கொள்ளலாம்.


காலை நேரம், குட்மார்னிங் சொல்லி கொடுக்கின்ற முத்தம், வாழ்க்கைத் துணைக்கு ஒருவேளை ஆடி கார் வாங்கிக் கொடுப்பதை விட ஆனந்தம் தரலாம். அப்படியெனில் அவருடைய காதல் மொழி என்ன என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும். இந்த ஐந்து காதல் மொழிகளும் தான் அதி முக்கியமானவை. உங்கள் வாழ்க்கைத் துணைக்கானது எந்த காதல் மொழி என்பதை நீங்கள் கண்டு பிடிக்க வேண்டும். அதற்குத் தக்கபடி நீங்கள் உங்களுடைய காதல் வாழ்க்கையை இயக்க வேண்டும்.

உங்கள் துணைவிக்கு பரிசு தான் காதல் மொழி எனில்இ “துணி காயப் போடவா ?“ என கேட்டால் கடுப்பாவார்கள். “கிளம்புப்பா காத்து வரட்டும் “ என்பார்கள்.

உங்கள் வாழ்க்கைத் துணைவருக்கு பாராட்டு தான் காதல் மொழி எனில் அவரிடம் போய்இ “வாங்க கொஞ்ச நேரம் பார்க்ல ல போய் உட்காரலாம்“ என்று சொன்னால் பதறிப் போவார்கள். “பார்க்ல என்ன இருக்குஇ இங்கே ஓரமா படலை உக்காந்துக்கலாமே“ என்பார்கள்.

எனவே உங்கள் காதல் பார்ட்னருக்கு எது முதன்மையான காதல் மொழி என்பதைக் கண்டு கொள்ளுங்கள். பாராட்டு ஒருவருடைய காதல் மொழி எனில் அவரை விமர்சிப்பதையோ, கிண்டலடிப்பதையோ தவிருங்கள். பரிசு ஒருவருடைய காதல் மொழி எனில் அவர் தருகின்ற பரிசை உதாசீனம் செய்யாதீர்கள். தனிப்பட்ட நேரம் ஒருவருடைய காதல் மொழியெனில் அவருக்காய் நிறைய நேரம் ஒதுக்குங்கள்.

இந்த மையக் கருத்தைத் தான் அவர் அந்த 135 பக்க நூலில் சுவாரஸ்யமாய் எழுதியிருக்கிறார். “காதலின் அடிப்படை உங்களுக்குப் பிடித்தமானதை அடுத்தவர் செய்ய வேண்டுமென எதிர்பார்ப்பதல்ல, அவருக்குப் பிடித்தமானதை நீங்கள் செய்வது“ ! இதையே ஒவ்வொருவரும் செய்தால் குடும்பங்கள் அன்பில் செழிக்கும், உறவில் வளரும். ஆனந்தமான வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டியது தான். ■






## குட்டி story...

# படித்ததில் பிடித்தது

உலக அளவில் பூனைகளுக்கான குத்துச்சண்டை போட்டி நடைபெற்றது!

அனைத்து நாட்டு பூனைகளையும் வீழ்த்தி அமெரிக்கா பூனை முன்னனியில் இருந்தது!

இந்தியா பூனை பாகிஸ்தான் பூனை ஜெர்மனிபூனை ஆஸ்திரேலியா பூனை

இப்படி அத்தனை நாட்டு பூனைகளும் அமெரிக்க பூனையிடம் அடிவாங்கி சுருண்டு கிடந்தன!

அமெரிக்கா பூனையல்லவா பாலும், இறைச்சியும் அளவிற்கு அதிகமாக உண்டு கொழுத்து கொழு,கொழுவென இருந்தது!

கடைசி இறுதி சுற்று....

இந்தச் சுற்றில் அமெரிக்க பூனையிடம் சோமாலியா நாட்டுப் பூனை மோதப் போவதாக அறிவித்தார்கள்!

பார்வையாளர்களுக்கு வியப்பு!

சோமாலியா நாட்டு பூனை

நோஞ்சானாக மெலிந்து

நடக்கவே தெம்பற்று தட்டுத்தடுமாறி

முக்கி முணங்கி மேடையேறியது!

இதுவா அமெரிக்க பூனையிடம் மோதப் போகிறது!



பார்வையாளர்கள் கேலியும் கிண்டலுமாய் சிரித்தார்கள்!

போட்டித்துவங்கியது!

அமெரிக்கா பூனை அலட்சியமாக

சோமாலியா பூனையின் அருகில் நெருங்கியது!

சோமாலியா பூனை முன்னங்காலை

சிரமப்பட்டு தூக்கி பறந்து ஒரேஅடி!

அமெரிக்க பூனைக்கு மண்டைக்குள்

ஒரு பல்பு பளீச் என்று எரிந்து படாரென வெடித்து சிதறியது!

கண்கள் இருண்டு மயங்கி சரிந்தது. பார்வையாளர்கள் அதிர்ச்சியில் வாயடைத்து நின்றார்கள்!

சற்று நேரம் சென்றபின், மெதுவாக கண்விழித்து பார்த்த அமெரிக்கா பூனைக்கு ஒன்றுமே புரியவில்லை!

சோமாலியா பூனையின் கழுத்தில் தங்கப்பதக்கம் தொங்கியது.!

போட்டியில் வென்றதற்காக சோமாலியா பூனையை எல்லோரும் கைகுலுக்கி பாராட்டிக் கொண்டிருந்தார்கள்!

மெதுவாக எழுந்து சோமாலியா பூனையின் அருகில் சென்று இத்தனை நாட்டு பூனைகளை வீழ்த்திய பலசாலியான என்னை நோஞ்சான் பூனையான நீ வீழ்த்தியது எப்படி?



என்று கேட்டது அமெரிக்க பூனை!

அமெரிக்கா பூனையின் காதில் மெதுவாக சோமாலியா பூனை சொன்னது!

நான் பூனையே இல்லை.!

புலி...டா...!

என் நாட்டு பஞ்சத்தில் இப்படியாகி விட்டேன்!

பாலும்,கறியும் உண்டாலும் பூனை பூனைதான்!

பட்டினி கிடந்தாலும் புலி புலிதான்!

---



# நன்றி நவிலல்!

## ஸ்ரீதரன் கருணேஸ்வரி தம்பதிகளின்

# அறுபதாம் கல்யாணம்

கடந்த 23.09.2023 அன்று, திரு ஸ்ரீதரன் (S. K. Silks and gold Paradies- Dortmund உரிமையாளர்கள்) அவர்களது 60 வது பிறந்த நாளை முன்னிட்டு, ஸ்ரீதரன் கருணேஸ்வரி தம்பதிகளின் அறுபதாம் கல்யாணம் நிகழ்வு, சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி நிகழ்வு பிள்ளைகள், சகோதர்கள், இவர்களின் பேரன்பினால், டோட்மூண்ட் சிவன் கோவிலில் இடம் பெற்றது.

பழகுவதற்கு இனிய தம்பதிகள், யேர்மனியில் வெளிவரும் ஊடகங்களுக்கு மனமுவந்து ஊக்கம் தருபவர்கள், அவர்கள் வாழ்வும், வளமும் சிறக்க நாம் வாழ்த்துவோம். நேரில் வாழ்த்து தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் வாழ்த்துகள் சொன்னவர்களுக்கும், தமது நன்றியை தெரிவித்து மகிழ்கின்றனர்.

**அன்புடன், பிள்ளைகள், சகோதரர்கள்.**
**யேர்மனி.23.09.2023**

---

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஏற்றுமதி

தெரியாத மட்டும் நல்லம் எண்டு நெச்சபடி நான் வீட்டை வெளிக்கிட்டன்.

இந்த முறை கலியாணத்துக்குப் போனது ஒரு மாசத்திலயே திரும்பியும் வேலைக்கு வந்திட்டுது. நான் ஒண்டும் கேக்கேல்லை. ரெண்டு பேருமே பேசாம வேலையைப் பாத்தம்.

போன மாசம் ரெண்டு தரம் கலியாணம் rehearsal பாத்த பிள்ளை வந்து, " Sir நான் கனடா போப்போறன். பாங்கில கொஞ்சம் காசு காட்டினா கனடா போகலாமாம். ஏற்கனவே கொஞ்சம் கட்டீட்டன் , மற்ற எல்லாம் ரெடி , ஒரு கோடி காசு ஒரு மாசம் டியமெ இல இருந்தாச் சரியாம், வீட்டை அடகு வைக்க அம்மா பாக்கிறா போறது நல்லது தானே எண்டு சொன்னதுக்கு என்ன பதில் சொல்லலாம் எண்டு யோசிக்கத் தொடங்கினன். யோசிச்சு முடிக்க முதல் ஏற்றுமதிக்காய் வளத்த இன்னொரு நாட்டுக்கோழி நொண்டாத காலில நோவெண்டு சொல்லிக் கொண்டு வந்து என்னை யோசிக்க விடாமக் காப்பாத்திச்சுது. இருக்கிற முழங்காலில இல்லாத நோவுக்கு வைத்தியம் பாத்திட்டு வெளிக்கிட் " வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதிக்கு இருந்த தடை நீக்கம் " எண்டு அரசாங்கம் அறிவித்தது எண்டு லோசனின் செய்திகள் தயையங்கம் சொல்ல, இது எந்த ஏற்றுமதியை எண்டு யோசிச்சபடி நடந்தன்.

---


# வெற்றிமணி திருமண சேவை

யேர்மனியில் கற்றிங்கன் நகரில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உள்ள சைவ, வேளாளர் 28 வயது நிரம்பிய பெண்ணுக்கு, ஏற்ற பட்டதாரி மணமகன் தேவை. தற்போதைய பாடசாலையிலேயே தொழிலைத் தொடரக் கூடிய தூரத்தில் வரனை எதிர்பார்க்கிறோம்.

**பெற்றோர் தொடர்பு கொள்ளவும்: 4915774318528**




Wirtschaftsingenieur பிறாங்பேட்டில் வேலை செய்யும் நற்குணமுள்ள 34 வயதுடைய சைவ வேளாளர் குல பெண்ணுக்கு தற்போதய இடத்தில் வேலையை தொடரக்கூடிய பட்டதாரி மணமகனை எதிர்பார்க்கிறோம்.

**பெற்றோர் தொடர்பு கொள்ளவும்: 4915774318528**






# வேற்றுலக உயிரினங்களை விட மனிதர்கள் முன்னேறியவர்களா?

இந்தப் பிரபஞ்சத்தில் நாம் தனியாக இருக்கிறோமா இல்லையா என்கிற கேள்வி எப்போதும் மனிதகுலத்தைக் கவர்ந்துள்ளது. கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் மற்றும் இதை விட இன்னும் அதிகமான கிரகங்கள் இருப்பதால் இந்தப் பிரபஞ்சத்தில் வேறு உயிரினங்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் அதிகமாக உள்ளன. ஆனால் அத்தகைய வேற்றுலக உயிரிகள் எப்படி இருக்கும்? அவை எவ்வளவு முன்னேற்றமடைந்தவையாக இருக்கும்?

ரஷ்ய வானியற்பியலாளர் ஆகிய நிக்கோலாய் கர்தாஷேவ் விண்வெளியில் காணக்கூடிய ஒரு வேற்றுலக உயிரினத்தின் முன்னேற்றத்தை வகைப்படுத்த ஒரு கட்டமைப்பை உருவாக்கியுள்ளார். அதன் பெயர் கர்தாஷேவ் அளவுகோல் ஆகும்.

கர்தாஷேவ் அளவுகோல் ஆற்றலைப் பயன்படுத்தும் திறனை அடிப்படையாகக் கொண்டு நாகரிகங்களை வகைகளாகப் பிரிக்கிறது:

நிலை 1: தங்கள் சொந்த கிரகத்தில் கிடைக்கும் அனைத்து வளங்களையும் பயன்படுத்த முடியும்.
நிலை 2: தங்கள் நட்சத்திரம் மற்றும் கிரக அமைப்பின் முழு ஆற்றலையும் பயன்படுத்த முடியும்.
நிலை 3: ஒரு முழு நட்சத்திரமண்டலத்தின் ஆற்றலைப் பயன்படுத்த முடியும்.
நிலை 4: பல நட்சத்திரமண்டலங்களின் ஆற்றலைப் பயன்படுத்த முடியும்.

ஒவ்வொரு நிலையும் ஆற்றல் நுகர்வு மற்றும் திறன்களில் ஒரு எழுச்சியைக் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு நிலை 1 நாகரிகத்திற்கு தனது கிரகத்தின் வளங்கள் மீது முழுமையான கட்டுப்பாடு இருக்கும், அதே நேரத்தில் நிலை 2 நாகரிகம் தங்கள் நட்சத்திரத்தில் இருந்து அனைத்து ஆற்றலையும் கைப்பற்ற அதற்கு உதவும் கட்டமைப்புகளை கட்டியிருக்கும்.




மனித இனம் தற்போது கர்தாஷேவ் அளவுகோலில் 0.75 ஆக கூறப்படுகின்றது. பெரிய கட்டமைப்புகளை உருவாக்குவது முதல் வளிமண்டலத்தை மாற்றுவது வரை,நாங்கள் எங்கள் கிரகத்தை மாற்றியுள்ளோம். நாம் தொடர்ந்து முன்னேறினால், சில நூற்றாண்டுகளுக்குள் நிலை 1 அடையலாம். அடுத்த படி மற்ற கிரகங்கள் மற்றும் இறுதியில் மற்ற நட்சத்திரங்களுக்கு எங்கள் எல்லைகளை விரிவுபடுத்துவதாக இருக்கும், இது நம்மை நிலை 2 மற்றும் அதற்கும் மேலாக மாற்றும்.


Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

இந்த அளவுகோல் பிரபஞ்சத்தில் முன்னேறிய நாகரிகங்களின் இருப்பைப் பற்றி ஊகிக்கவும் அனுமதிக்கிறது. ஒரு நிலை 3 நாகரீகத்தின் செயல்பாடுகள் அதன் முழு நட்சத்திரமண்டலத்திலும் தெரியும் அளவுக்கு முன்னேறியிருக்கும். இருப்பினும், இதுபோன்ற அறிகுறிகளை நாங்கள் இதுவரை கவனிக்கவில்லை, இதனால் இத்தகைய நாகரிகங்கள் இருந்தால், அவை மில்க்கீவேக்கு (milky way) அருகில் இல்லை என்பதை இது குறிக்கிறது. இது ஆறுதலளிப்பதாகவும் அதே நேரத்தில் ஏமாற்றமளிப்பதாகவும் இருக்கலாம்.

நாம் உயர்ந்த வகைகளுக்கு நகரும்போது, அளவுகோல் மேலும் ஊகமாகிறது. நிலை 4 அல்லது நிலை 5 நாகரீகம், நட்சத்திரக் கொத்துகள் அல்லது முழு பிரபஞ்சத்தின் ஆற்றலைப் பயன்படுத்த முடியும். இத்தகைய நாகரிகங்கள் நமது பிரபஞ்சத்தின் படைப்பாளர்களாகவும் இருக்கலாம். இவை நமது புரிதலுக்கு அப்பாற்பட்ட காரணங்களுக்காக செயல்படுகின்றன.

கர்தாஷேவ் அளவுகோல் ஒரு கவர்ச்சிகரமான சிந்தனை பரிசோதனை என்றாலும், அதற்கு அதன் வரம்புகள் உள்ளன. அனைத்து முன்னேறிய நாகரிகங்களும் விரிவாக்கம் மற்றும் அதிக ஆற்றலை நுகரும் என்று இது கருதுகிறது, ஆனால் உண்மையில் அப்படி இருக்கவேண்டிய அவசியம் கிடையாது. மேலும், இந்த அளவுகோல் வேறுபட்ட தொழில்நுட்பங்களைக் கொண்ட நாகரிகங்களையோ அல்லது அறியப்படாத ஆற்றல் வடிவங்களைப் பயன்படுத்தும் நாகரிகங்களையோ கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை.

ஆக மொத்தத்தில் கர்தாஷேவ் அளவுகோல் பிரபஞ்சத்தில் முன்னேறிய நாகரிகங்களுக்கான திறனைப் பற்றி சிந்திக்க ஒரு கட்டாயமான கட்டமைப்பை வழங்குகிறது. வேற்றுலக உயிரினங்கள் உள்ளதற்கு நாம் இன்னும் ஆதாரங்களைக் காணவில்லை என்றாலும், இந்த அளவுகோல் அத்தகைய உயிர்கள் எடுக்கக்கூடிய வடிவங்கள் மற்றும் அவற்றுடன் எவ்வாறு தொடர்பு கொள்ளலாம் என்பதைப் பற்றி சிந்திக்க அனுமதிக்கிறது.



நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2023 ஆம் ஆண்டின்
அதி உன்னத
புத்தம் புது டிசைன்கள்
எமது கையிருப்பில்



திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.

பொன்னுருக்கு, காதுகுத்து
வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்



ஆலயங்களுக்கு
தேவையான
பூஜை
பொருட்கள்
எம்மிடம்
நிறைவாக
உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள்
என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்







# பொய்யுரைப்பார் ஒரு சினெஸ்தேசியா நோயாளியாக இருக்கலாம்



எழுத்தாளர்கள் அபர பிரம்மாக்கள் என்று சொல்வார்கள். படைப்புப் பல படைத்துப் பலருக்கும் தம்முடைய கருத்துக்களைக் கொண்டு சேர்க்கும் பொறுப்புள்ளவர்கள். எழுத்தாளர்கள் அவ்வாறான பொறுப்பில் இருக்கும் போது உண்மைக்குப் பாடை கட்டிப் பொய்மைக்கு மகுடம் சூட்டுவது பாரிய குற்றத்தைச் செய்யும் செயலாக அமைகின்றது. இதனால், வரலாறு பொய்ப்பிக்கப்படுகின்றது. வரலாற்றைப் புரட்டிப் போடலாம் என்பது எழுத்தாலே மட்டுமே சாத்தியம்

தம்முடைய புகழுக்காகத் தம்முடைய உறவுகளையே பொய்யாளர்களாகவும் கெட்டவர்களாகவும் காட்டி புகழுக்குரிய உறவை கீழ்நிலைக்குத் தள்ளுகின்ற மக்களை கண்கூடாகக் காணுகின்றோம். ஒரு பொய்யால் இந்த உலகம் வாழும் என்றால், நன்மையே உண்டு என்றால் சொல்லாம். ஒரு நிரபராதியைக் கொல்வதற்குப் பலர் முற்படும் போது அந்நிரபராதியைக் காப்பாற்றுவதற்குப் பொய் உரைக்கலாம். இதனையே தான் வள்ளுவர்

**“பொய்ம்மையும் வாய்மையிடத்த**
**புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின் ”**
**என்று கூறுகின்றார்.**

பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் செய்ய வேண்டிய காலத்திலே விராடனுடைய மத்ஸய தேசம் சென்றார்கள். அங்கு செல்வதற்குமுன் தம்முடைய பெயர்களையும் தொழில்களையும் மாற்றினர். தருமன் கங்கன் என்று பெயர் மாற்றி அரசபைப் பணியாளனாகவும், வீமன் வாலாலன் என்ற பெயரில் சமையற்காரனாகவும் அர்ச்சுனன் பிருகந்நளை என்ற பெயரில் அந்தப்புரத்தில் நடனப்பெண்ணாகவும், நகுலன் தாமக்கிரந்தி என்ற பெயரில் குதிரை மேய்ப்பவனாகவும் சகாதேவன் தந்திரீபாலன் என்ற பெயரில் பசுமேய்ப்போனாகவும், திரௌபதி சைரந்திரி என்ற பெயரிலே அந்தப்புர சேவகியாகவும் பொய்யான தோற்றத்துடன் விராடனது அரண்மனைக்குச் சென்றார்கள். இந்தப் பொய்களால் துரியோதனனுடைய ஒற்றர்களிடம் இருந்து மறைந்து வாழ முடிந்தது.

இதேவேளை பேராசிரியர் கைலாசபதி அவர்கள் அடியும் முடியும் என்னும் தன்னுடைய நூலிலே தனிப்பட்ட ஒருவரின் திரிபுணர்ச்சி அல்லது மாயை இரங்கத்தக்கதாயினும் அதிகம் அஞ்ச வேண்டிய தொன்றன்று. ஆனால், ஒரு கூட்டத்தவருடைய அல்லது சமூகத்தினது பொய்மை அந்தச் சமூகத்தினருக்கு மாத்திரமல்லாது பிறருக்கும் பேராபத்து விளைவிக்கக் கூடியதாகும் என்கிறார். இங்கு இரண்டொரு எழுத்தாளர்கள் ஜெர்மனியர் ஆரிய இனத்தவர்கள் என்றும் உலகை ஆளப்பிறந்தவர்கள் என்றும் எழுதியது நாஸிகளின் தத்துமாகியது. பல்லாயிரக்கணக்கான ஜெர்மனிய மக்களும் அதை நம்பினார்கள். இதன் விளைவு உலகறிந்த கொடூரமான யுத்தம். இதேபோல பேராசிரியர் இன்னும் ஒரு உதாரணத்தை எடுத்துக் காட்டுகின்றார். இரண்டாவது உலகப் போருக்குப் பல ஆண்டுகள் முன்னிருந்து யப்பானில் இருந்த ஆளும் வர்க்கத்தினர் அந்நாட்டு அரசர் கடவுளின் குமாரர் என்ற ஐதீகத்தைத் தேசத் தத்துவமாகக் காத்தனர். இந்த மாபெரும் பொய்மையை நம்பி பல்லாயிரக்கணக்கான போர்வீரர்கள் தாம் கடவுளுக்காக இறப்பதாக எண்ணி இறுதி வரைப் போரிட்டு இறந்தனர். இவ்வாறு எழுத்தாளர்களும் மூடநம்பிக்கைவாதிகளும் முன்வைக்கின்ற பொய்மை பாரிய தாக்கத்தை உலகத்தில் ஏற்படுத்தும்.

ஒரு சிறிய பொய்தானே என்று அலட்சியம் செய்யும் பட்சத்தில் அது காலப் போக்கில் பெரிய உண்மையாக உருவம் எடுத்துவிடும். பொய்யென்றால், அது தோன்றும் போதே நிறுத்தியிருப்பார்களே! இவ்வளவு காலமும் இருந்து வந்தது எப்படிப் பொய்யாகும்! அப்படியென்றால், இத்தனை காலமும் நம்பியவர்கள் முட்டாள்களா? என்று மக்கள் கேள்விக்கணைகளைத் தொடுப்பார்கள். எனவே பொய் என்று அறியும் பட்சத்தில் உடனே நையப்புடைக்க வேண்டிய அவசியம் எழுத்தாளர்களுக்கு இருக்கின்றது.

பிறப்பில் இருந்து பாரதி பாடிய பொய் சொல்லக்கூடாது பாப்பா பாடசாலையில் படி த்துத் தான் மக்கள் வளர்ந்தாலும் பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த புலவர் பெருமான்கள் அதிகம். இது கவிஞர்களுக்கு உள்ளத்தில் ஊறி வாழ்க்கையிலும் படிந்து விட்டது போலும். அதனாலேயே பல mee too க்கள் வலுவிழந்து நிற்கின்றன. பாலைபாடிய பெருங்கடுங்கோ கலித்தொகையிலே ஒரு மரத்தின் கீழ் நிற்பவன் பொய் சொன்னால், அந்த மரம் வாடிவிடும் என்று பாடியிருக்கின்றார். அதனால், இப்புலவர் இம்மரத்தின் கீழ் நின்று பாடியிருக்க மாட்டார் என்று தோன்றுகின்றது. எனவே பொய் சொல்பவர்களை அந்த மரத்தின் கீழ் கொண்டு நிறுத்தி சொல்லச் சொல்லும் பட்சத்தில் பொய்மையை நிரூபிக்கலாம். ஆனால், தமிழர்கள் எதனையும் ஆவணப்படுத்தும் முக்கியத்தவத்தை தலைமேற்கொள்வது இல்லையே.

சங்க இலக்கியத்தலே நிலம்பெயர்நதாலும் பொய் சொல்லக்கூடாது என்பது அறமாகக் கருதப்பட்டது. வாய்மை என்பது தவறியும் பொய் பேசாதிருத்தலாக கொள்ளப்படுகிறது. இங்கு அரிச்சந்திரனுடைய தற்காலத்திலே குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்காக அமெரிக்காவிலே lie detector என்னும் ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடித்துள்ளார்கள். பொய் சொல்பவனுடைய நாடி, இதயம், மூளை ஆகியவற்றின் இயக்கங்களைக் கணிப்பிட்டு அவன் சொல்வது பொய்யா உண்மையா என்று கண்டுபிடிக்கின்றார்கள். இக்கருவி பொய்மைக்குச் சாவுமணி அடிக்கும். இதைப்போல் மனத்தை அறியும் கருவியும் இருந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும். ஆனால், இந்தக் கருவி மனிதனை மனஅழுத்தத்துக்கு ஆளாக்கி, அவனைச் சித்தப் பிரமையுள்ளவனாக்கி அலையவிடும். அதனாலேயே இயற்கை மனத்தை மறைவாகவே வைத்திருக்கின்றது.



பொதுவாகவே எழுத்தாளர்களின் எழுத்திலுள்ள தர்மத்தைக் கண்டுபிடிப்பது வாசகர்களின் வாசிப்பு அனுபவத்தையும் வாசிப்பின் தன்மையையும் பொறுத்தது. நுண்மான்நுழைபுலம் போல எதனையும் ஆழ அகல விரிவுடன் வாசிக்கின்ற போதும்,

28 ஆம் பக்கம் பார்க்க...






15 ஆம் பக்கத் தொடர்ச்சி....

## ஆக்கிரமிப்பாளர் VS ஆக்கிரமிக்கப்பட்ட மக்கள்:




அதன் ஒரேயொரு இராணுவக் கோட்பாடாக இருந்து வந்துள்ளது. இனியும் அப்படித்தான் இருக்கப்போகின்றது. இந்த உரையாடல் என்பது குற்றம் சுமத்தல் சதுரங்க ஆட்டமாக இருக்கக்கூடாது. இந்த கொடூரத்தை நிறுத்துவது தொடர்பானதாக இருக்கவேண்டும்' இப்படியெல்லாம் அவர் வாதங்களை முன்வைத்துக் கொண்டிருக்கும் போது விடாப்பிடியாகத் தனது அதே நோக்கிலான கேள்வியை எந்தவிதக் குற்றவுணர்வுமின்றி ஊடகர் மீண்டும் முன்னிறுத்துகிறார்:

'நீங்கள் இஸ்ரேலின் பொதுமக்கள் மீதான தாக்குதலை மட்டுமே கண்டிக்கின்றீர்கள், ஹமாஸைக் கண்டிக்க வில்லையே'

'நீங்கள் எத்தனை தடவை இஸ்ரேல் அதிகாரிகளை நேர்காணல் செய்திருப்பீர்கள்.குறைந்தது ஒரு நூறு தடவைகள். எத்தனை தடவைகள் இஸ்ரேலின் போர்க் குற்றங்களை உங்கள் கமராக்கள் படம்பிடித்திருக்கின்றன. எப்போதாவது ஒரு தடவை..ஒரேயொரு தடவை அவர்களின் செயல்களுக்காக அவர்களைக் கண்டிக்குமாறு கேள்வியெழுப்பியிருக்கின்றீர்களா? இல்லை! ஆனால் பலஸ்தீனர்கள் மட்டும் தங்களைத் தாங்களே கண்டிக்க



வேண்டுமென்று எதிர்பார்க்கின்றீர்கள்.

உங்களின அந்தக் கேள்விக்குப் பதிலளிக்க நான் ஏன் மறுக்கின்றேன் தெரியுமா? இதன் முழுமை சார்ந்த ஒட்டுமொத்தமான தவறான சித்தரிப்பே எனது மறுப்பிற்குக் காரணம். இது ஒரு அரசியல் முரண்பாடு. நாங்கள் 75 ஆண்டுகளாக எமது உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றோம். சரியான தொடக்கப் புள்ளி என்பது அடிப்படைப் பிரச்சினை குறித்த கவனக்குவிப்போடு உரையாடுவது.

இஸ்ரேல் பொதுமக்கள் கொல்லப்படும் போது எங்களை நேர்காணலுக்கு அழைத்திருக்கின்றீர்கள்.மேற்குக் கரையில் கடந்த சில மாதங்களில் மாத்திரம் இருநூறுக்கும் மேற்பட்ட பலஸ்தீன மக்கள் இஸ்ரேல் இராணுவத்தினாலும் யூதக் குடியேற்றவாசிகளாலும் கொல்லப்பட்ட போது எங்களை அழைத்தீர்களா? 16 வருடங்களாக காசாவின் திறந்தவெளிச் சிறைச்சாலைக்குள் 2 மில்லியன் மக்கள் பணயக்கைதிகளாக வைக்கப் பட்டுள்ளபோது எங்களை அழைத்து நேர்கண்டீர்களா?

உக்ரைன் போரை எப்படி அணுகுகின்றீர்கள். உக்ரைன் அதிகாரிகளை



அழைத்து அவர்களின் சில போர்மீறல்கள் குறித்துக் கேள்வி எழுப்பியிருக்கின்றீர்களா என்றும் கேட்கின்றார். மேலும் அவர் சர்வதேச சட்டங்களுக்கு அமைவான தீர்வைக் கோருகின்றார். இஸ்ரேலைப் பொறுப்புக்கூறவைக்க வேண்டுமென்கிறார். இங்கு கவனிக்கத் தக்க விடயம் என்னவெனில் ஊடகங்கள் மீண்டும் மீண்டும் தமது ஒருமுகப்பட்ட அணுகுமுறையினூடு, எதனை நிலை நிறுத்த முனைகின்றன என்பதாகும். ஊடகங்களின் தார்மீகமற்ற போக்குகள் ஜனநாயகத்தின் பேரில் அதிகார சக்திகளுக்குத் துணைபோகின்றன. கருத்துச் சுதந்திரமென்ற பேரில் ஒடுக்கப்படுபவனைக் கண்டிப்பதும் – ஒடுக்குமுறையாளர்கள், ஆக்கிரமிப்பாளர்களை நியாயப்படுத்தத் துணைபோகின்ற கருத்துருவாக்கங்களை உற்பத்திசெய்வதும், அவற்றைத் திருப்பித்திருப்பிச் சொல்வதன்மூலம் பொதுப்புத்தியிற் திணிப்பதுவும்தான் வல்லரசுகளின் செல்வாக்கிற்குட்பட்ட சர்வதேச ஊடகப் போக்கு.







# Trading உருவான வரலாறு எப்படி?

வா நண்பா வசதியான பணக்கார வாழ்க்கை வாழுவோம். கடின உழைப்பு தேவையில்லை, வீட்டில் இருந்து கொண்டே வேலை செய்யலாம். இப்படிப்பட்ட வாக்குறுதிகளை வழங்குவோர் சொல்லுகின்ற வேலைகளில் ஒன்று தான், இந்த டிரேடிங் (Trading). இந்த டிரேடிங்கை (Trading) பற்றி இன்றைய தினம் நாங்கள் விரிவாக பார்க்க இருக்கின்றோம். இது எவ்வாறு உருவாகியது என்கின்ற அடிப்படைக் கதை தெரிந்தால், தான் இந்த டிரேடிங்கை (Trading) புரிந்து கொள்வது இலகுவாக இருக்கும். ஏனென்றால் டிரேடிங் மிக மிக கடினமான ஒரு விடயம்.

ஆரம்ப காலகட்டங்களில், மனிதனுடைய பகுத்தறிவு வளரும் பொழுது, மனிதன் ஒரு

சிந்தனை
சிவவினோபன் (யேர்மனி)

இடத்தில் இருந்து வாழ தொடங்கினான். அதன் பின் தனக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யத் தொடங்கினான். அதன் பின் மற்றய இடங்களில் வாழுகின்ற மனிதர்கள் எதையெல்லாம் உற்பத்தி செய்கிறார்கள் என்பதை, ஆவலாக அறிந்து கொள்ள ஆசை கொண்டான். அந்த இடங்களுக்குச் சென்று அவர்களிடம் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை கொடுத்து, அவர்கள் உற்பத்தி செய்த பொருட்களை வாங்க, பண்டமாற்று என்கின்ற ஒரு விடயம் ஆரம்பமானது. அதன் வளர்ச்சி தான் கடல் தாண்டி பல நாடுகளை கண்டுபிடித்து அந்த நாடுகளில் இருக்கின்ற வளங்களை வர்த்தகம் மூலமாகவோ அல்லது கொள்ளை அடிப்பதன் மூலமாகவோ எடுத்து வருவதை பலர் தங்கள் வழக்கமாக்கிக் கொண்டார்கள்.

இவ்வாறு பல பணக்கார முதலாளிகள், கப்பல்களை கட்டி அதை மற்றய கண்டங்களுக்கு, நாடுகளுக்கு அனுப்பி வைத்தார்கள். அந்தக் கப்பல் சென்று திரும்பி வந்தால், அதில் பல செல்வங்கள் வரும். அந்த செல்வங்களை வைத்து, தங்கள் பணத்தை இன்னும் பெருக்கிக் கொள்ளலாம் என்று நினைத்தார்கள். இதில் அந்த காலகட்டத்தில் இருந்த மிகப் பெரிய ஆபத்து என்னவென்றால், சென்ற அனைத்து கப்பல்களும் திரும்பி வந்தது என்று இல்லை. இயற்கை அனர்த்தங்களால், அல்லது சென்ற இடத்தில் அங்கு வாழ்ந்த மக்கள்களால் அழிக்கப்பட்டதனால், அல்லது இடையிலேயே மற்றைய போட்டி கப்பல்களால் உடைக்கப்பட்டதனால், என்று பல கப்பல்கள் திரும்பி வரவில்லை. சில கப்பல்கள் திரும்பி வந்தன. இங்கு தான் இந்த ட்ரெயினிங் (Trading) என்பதன் அடிப்படை ஆரம்பிக்கின்றது.

அப்போது வாழ்ந்த அந்த பண முதலாளிகள் என்ன செய்தார்கள் என்றால். சிறிய முதலாளிகள் மற்றும் சாதாரண மக்களிடம் சொன்னார்கள், இப்போது செல்கின்ற கப்பல் திரும்பி வந்தால், அதில் இருக்கின்ற செல்வத்தை அனைவரும் பகிர்ந்து கொள்ளலாம். ஆகவே இந்தக் கப்பல் திரும்பி வரும் என்றால் நீங்கள் ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தை எங்களுக்கு கட்ட வேண்டும். நீங்கள் கட்டுகின்ற பணத் தொகையை, வைத்துக்கொண்டு கப்பல் திரும்பி வரும் பொழுது அதன் பல மடங்கான பணத்தொகை உங்களுக்கு அந்தக் கப்பலில் இருக்கும் சொத்துக்களை பிரிப்ப தன் மூலமாக தரப்படும். உதாரணத்திற்கு நீங்கள் பத்து வெள்ளி காசுகளை கட்டினால் அந்தக் கப்பல் திரும்பி வரும் பொழுது, அந்தக் கப்பலின் சொத்தில் இருந்து கொண்டு உங்களுக்கு லட்சம் வெள்ளி காசுகளாக திருப்பித் தருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றது. என்கின்ற ஒரு முறையை ஆரம்பித்தார்கள் இதுதான் இப்போது நவீன மயப்படுத்தப்பட்டு இருக்கின்ற ட்ரேடிங்கின் (Trading) அடி ப்படை ஆக இருக்கின்றது. இப்போது அந்தக் கப்பல் திரும்பி வந்தால் பத்து வெள்ளி கொடுத்தவர்களுக்கு ஒரு லட்சம் வெள்ளி கிடைக்கும். அதுவே அந்த கப்பல் திருப்பி வரவில்லை என்றால் அந்த பத்து வள்ளி திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. அது அந்த பணக்கார முதலாளிகளுக்கு அவர்களுக்கு ஏற்படுத்திய அந்த நட்டத்தை ஓரளவு சமாளிக்கக்கூடிய தொகையை திருப்பித் தரக் கூடியதாக இருந்தது.



இப்போது ஒரு சிலர் சொன்னார்கள் இல்லை எனக்குத் தெரியும் இந்த கால கட்டத்தில் இந்த கப்பல் வெளிக்கிட்டால், இந்தக் கப்பல் திரும்பி வராது ஆகவே நான் காசு கட்ட மாட்டேன் என்று சொன்னார்கள். அப்போது அந்த பண முதலாளிகள் என்ன செய்தார்கள் என்றால் கப்பல் வரும் என்று சொல்பவர்கள் 10 வெள்ளிகட்டுங்கள். கப்பல் வராது என்று சொல்பவர்கள் 10 வெள்ளி கட்டுங்கள். சென்ற கப்பல் திரும்பி வந்தால், வராது என்று சொன்னவர்களுக்கு கட்டிய பணம் திருப்பி கொடுக்கப்பட மாட்டாது. வரும் என்று சொன்னவர்களுக்கு அவர்கள் கொடுத்த பணம் பல மடங்காக திருப்பி கிடைக்கும். இதுவே சென்ற கப்பல் திருப்பி வராது என்று சொன்னவர்கள் சொன்னதைப் போன்று, அந்தக் கப்பல் திருப்பி வரவில்லை, என்றால் அவர்கள் கொடுத்த பணம் பல மடங்காக திருப்பிக் கொடுக்கப்படும். என்கின்ற ஒரு முறை ஆரம்பிக்கப்பட்டு. அதுதான் இன்றுவரையும் இணையதளத்தில் கூட, வாங்குதல் விற்றல் என்கின்ற அடிப்படையில் இந்த டிரேடிங்காக (Trading) நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

அடுத்த தொடரில் இது எவ்வாறு இன்றைய வர்த்தகத்தில் செயல்படுகின்றது என்கின்ற விரிவான விளக்கத்தை வழங்க காத்திருக்கின்றேன். வாசிக்கின்ற உங்களுக்கு அடுத்த தொடர் வேண்டுமென்று ஆசைப்பட்டால், நீங்கள் உங்கள் விருப்பத்தை தெரிவித்தால் மட்டுமே, அடுத்த தொடர் உங்களுக்காக காத்திருக்கின்றது.





பூங்கோதை
(இங்கிலாந்து)

# பால்வண்ணம் ஒரு குறும் வாசகப் பகிர்வு





அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற எழுத்தாளர் கே எஸ் சுதாகர் எழுதிய இச்சிறு கதைத் தொகுப்பு 2022ம் ஆண்டில் 'எழுத்து' பிரசுரமாக இந்தியாவில் இருந்து படைப்பாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் தாயகத்தில் பேராதனை பல்கலைக் கழகத்தில் தன் பொறியியல் பட்டத்தை பெற்றுக் கொண்டவர் என்பதும், தாயகத்தில் ஞானம் சஞ்சிகை உள்ளிட்ட பல சஞ்சிகைகள், பத்திரிகைகள் நடாத்திய சிறுகதைப் போட்டிகளில் பங்குபற்றி பத்திற்கும் மேற்பட்ட பல பரிசுகளை வென்றிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் திரு தி.ஞானசேகரன் அவர்கள் இச்சிறுகதைத் தொகுப்பிற்கு ஆழமான ஒரு முன்னுரை வழங்கியுள்ளார். அதிலிருந்து கே.எஸ்.சுதாகர் அவர்கள் இதற்கு முன்பாக, 2007இல் 'எங்கே போகிறோம்' என்ற சிறுகதைத் தொகுப்பையும் 2014 இல் 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும்' சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டிருக்கிறார் என்று அறியக் கிடைக்கிறது. எழுத்தாளர்கள் என்பவர்கள் சாதாரண மனிதர்கள் போல் அல்லாது, தம்மைச் சுற்றி நடப்பதை, தாம் கண்டவற்றை, தம் அனுபவங்களை இலக்கியங்களில் எழுதி வைக்கிறார்கள். தம் எழுத்துக்களால் தம்மை ஒரு காலத்தின் கண்ணாடியாக்கி அதன் மூலம் தம் அடுத்த தலைமுறைக்கு தாம் வாழ்ந்த காலத்தை பிரதிபலிக்கிறார்கள். அவ்வகையில் 'பால்வண்ணத்தின்' படைப்பாளி கே எஸ்.சுதாகரும் தான் கேட்டறிந்தவற்றை, தான் அனுபவத்தில் கண்ட விடயங்களை புனைவுகளின் ஊடாக வாசகர்களுக்கு புரிந்து கொள்ளக் கூடியதாக மிக இலகு மொழிநடையில் படைத்துள்ளார்.




இந்த சிறுகதைத் தொகுப்பில் உள்ள 12 சிறுகதைகளும் மிக நேர்த்தியாக, தாம் சொல்ல வந்தமையைக் கருத்துக்களைச் சொல்லிச் செல்கின்றன. ஈழத் தமிழர்களின் வாழ்வில் உள்நாட்டு யுத்தம் நேரடியாகவும், அதன் பின்னரும் ஏற்படுத்திய வடுக்களைத் தவிர்த்து நாம் இலக்கியங்கள் படைத்து விட முடியாத சூழலில் இருக்கிறோம் என்பதற்கு இச்சிறுகதைகள் உதாரணமாகின்றன.

தாயகத்திலும் புலம் பெயர்ந்த நாடுகளில்,குறிப்பாக அவுஸ்திரேலியாவிலும் கதை மாந்தர்கள் நடமாடுகிறார்கள். பால்வண்ணம் சிறுகதையின் தலைப்பே இத்தொகுப்பின் தலைப்பாகவும் இருப்பது சாலப்பொருத்தமாகவும் இருக்கிறது.

இக்கதைகள் எம்மக்களின் புலம் பெயர்வில், அவர்கள் வாழ்வின் அரசியல், சமூக, பொருளாதார, குடியியல் சார்ந்த சவால்களையும் சஞ்சலங்களையும் கோடிட்டுக் காட்டுகிறது. மெல்பேர்னில் நடப்பதாகக் காட்டியிருக்கும் கதைகளில் தஞ்சம் புகுந்த நாடுகளில் நம்மக்கள் எதிர்நோக்குகின்ற உள, உடற் சிக்கல்கள் கருத்துக் செறிவோடு நகர்த்தப் பட்டிருக்கின்றன.இச்சிறுகதைகளில் எனக்கு மிகப் பிடித்த பல சிறுகதைகளில் 'பாம்பும் ஏணியும்', 'அம்மாவின் எண்பதாவது பிறந்த தின உரை' என்பன அடங்குகின்றன. இதற்குக் காரணம் இதில் வரும் பெண் கதாபாத்திரங்களின் ஸ்திரத் தன்மையும், வைராக்கியத்தோடு அவர்கள் கடந்து போகும் வலி சுமந்த பாதைகளு மேயாகும்.

பாம்பும் ஏணியும் சிறுகதையில் வரும் பெண் கதாபாத்திரம் சிவானி ஈழத்தில் இருந்து, பெற்றோர்களை போரில் இழந்த பின் மெல்பேர்னிற்கு தன் தாய் மாமனை நம்பி வந்தவள். பட்டதாரியான சிவானி மாமனின் உணவு விடுதியில் அடைத்து வைக்கப்பட்டு சமையல்காரி ஆக்கப்படுகிறாள்.அவளுக்கு கடுமையான வேலைகள் சுமத்தப்படுவதோடு அவள் வெளியில் எங்கும் போக அனுமதிக்கப்படவில்லை. ஒருவாறு ஜனகன் என்பவனை நம்பி அந்த உணவு விடுதியில் இருந்து தப்பி த்துப் போனவளுக்கு வாழ்க்கை ஒன்றும் உவப்பாய் இருக்கவில்லை. சட்டிக்குத் தப்பி, பல்லி ஒன்று அடுப்பில் விழுந்த கதையாய் அவள் வாழ்வு சின்னாபின்னமாக்கப்படுகிறது. இருந்தாலும் தன்னுடைய தீவிரமான முயற்சியால் அவள் தனக்குத் தேவையான, முடிந்தளவு கல்வியையும் தொழிலையும் தேர்ந்தெடுக்க முடிகிறது.

படித்த பெண்ணாக இருப்பினும் எமது சமூகக் கட்டுமானத்தை முதுகில் சுமந்தே புலம் பெயர்வதால், அவளுக்கு சுதந்திரமாக தனக்கு நேர்ந்து கொண்டிருந்த அவல வாழ்வில் இருந்து வெளியே வர முடியவில்லை. ஆனாலும் ஒரு எல்லையில் அவளால் அந்த வாழ்விலிருந்து தப்பி ஓடி, காவல் துறையிடம் தஞ்சம் புக முடிகிறது. தனியாக புலம் பெயர் நாடுகளுக்கு வரும் பெண்கள் முகம் கொடுக்கும் முக்கியமான சவால்களில் ஒன்று உணர்வு ரீதியாகப் பாதிக்கப்படுவது தான். இதே போல தன் எண்பதாவது பிறந்த தினத்தில், ஒரு வயோதிபத் தாய் தன் உள்ளக்கிடைக்கையை தன் பிறந்த நாள் உரையின் ஊடாக வெளிப்படுத்துகிறாள்.தாயகத்தில் இருந்த போது சாதீயத்தால் பாதிக்கப்பட்டு, மனப்பிறழ்வால் வாழ்வை இழந்து நிற்கும் தன் மூத்த மகனை எண்ணி அழுகின்ற ஒரு தாயை இங்கு நாம் காண முடிகிறது.

28 ஆம் பக்கம் பார்க்க...




முற்றிலும் இலவசமான சேவை!

## விழிப்புணர்வு தியானப் பயிற்சி

விழிப்புணர்வு தியானப் பயிற்சி உங்களுக்குள் உள்ள
இறைத்தன்மையை உணர்ந்து கொள்ளவும்,
எப்படி மன அழுத்தத்திற்குள் போகாமல் இருப்பதற்கும்,
மன அழுத்தத்தில் இருந்து எப்படி வெளியேற்றுவதற்கான விழிப்புணர்வு பயிற்சி.

பின்குறிப்பு:
நேரமும், முற்பதிவும் முக்கியம்.
கட்டணம் : முற்றிலும் இலவசம்

| | | | |
|---|---|---|---|
| நவம்பர் | : | 18 | சனிக்கிழமை |
| டிசம்பர் | : | 16 | சனிக்கிழமை |
| ஜனவரி | : | 27 | சனிக்கிழமை |
| பெப்ரவரி | : | 17 | சனிக்கிழமை |
| நேரம் | : | பி.ப.4 - பி.ப.6 | |

தமிழர் அரங்கம்
Rheinische Str. 76-80
44137 Dortmund

தொடர்புகளுக்கு: திருமதி. சபேசன் 0176 80 14 3338 தவம்: 0177 677 9017



## உலகில் முதலில் தோன்றியது மனிதனா? தென்னை மரமா?

# தேங்காய் மதம்!



பிரியா இராமநாதன்
(இலங்கை)



நாடோடிக் கதைகள் மற்றும் புராணங்களின் அடிப்படையில் பார்த்தால், பல்வேறு தேசத்தினரும் தேங்காயின் பூர்விகத்திற்கு உரிமை கோருவதாகவே எண்ணத்தோன்றும். சுமார் இருபது மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பாகவே அதாவது மனித இனம் தோன்றுவதற்கு முன்பாகவே பூமியில் தென்னை மரம் இருந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன. ஆனாலும் உலகின் எந்தப் பகுதியில் தென்னை முதலில் உருவானது என்பதை கண்டறிவது கடினம். ஒருசில படிம ஆதாரங்களைக் கொண்டு பசுபிக் பெருங் கடலில் அமைந்திருக்கும் தீவுகளில் குறிப்பாக " papua new guinea" தீவுகளில் தென்னை மரங்கள் முதலில் உருவாகியிருக்கலாம் என்றும்,இந்திய பெருங் கடலின் கரையோர பகுதிகளிலும் ஆதி தென்னை மரங்கள் இருந்திருக்கலாம் எனவும்கூறப்படுகின்றது. பிலிப்பைன்ஸ், பாலிநேசியா பகுதிகளும் தென்னைக்கானபூர்விக பிரதேசங்களாக கருதப்படுகின்றது.

வெப்ப மண்டல பிரதேசங்களிலெல்லாம் வளரும் தென்னையானது மணற்பாங்கான நிலத்தில் உப்பு நீரை தாங்கி வளரக்கூடியது. அதனால் கரையோரங்களில் அதிகமாக காணப்பட்ட தென்னைகளிலிருந்து நீருக்குள் விழுந்த தேங்காய்கள் கடல் அலைகளால் இழுத்து செல்லப்பட்டு மற்ற கரைகளுக்கும் தீவுகளுக்கும் பரவி, அங்கேயும் தென்னைகள் முளைத்திருக்கலாம் என்கின்றன ஆய்வுகள். 2011 ஆம் ஆண்டு வெளியான தென்னை தொடர்பான தாவரவியல் ஆராச்சியின்படி உலகின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த தேங்காய்களின் DNA மாதிரிகளை சோதனை செய்து ஞுஙரழவ் ஆதியிலே பசுபிக் பெருங் கடல் தென்னை ( பிலிப்பைன்ஸ், மலேசியா,இந்தோனேசியா பகுதிகளை உள்ளடக்கியது), இந்திய பெருங் கடல் தென்னை (தென் இந்தியா, இலங்கை, மாலை தீவு, லட்சத்தீவு பகுதிகளை உள்ளடக்கியது) என இரண்டு விதமான தென்னை ரகங்கள் இருந்திருப்பதாகவும் இதில் எது முதலில் உருவாகியது என்பதை அறுதியிட்டு கூற முடியவில்லை என்றும் கூறினர்.

இந்தியாவிற்கு வந்த போர்த்துகீசியர்கள் இந்திய தேங்காய்களை ஆப்ரிக்கா, தென் அமேரிக்கா போன்ற கண்டங்களுக்கு எடுத்து சென்றதன் மூலம் அந்தந்த பகுதிகளுக்கு பரவிதாகவும், அதேபோல ஸ்பானியர்கள் மூலமாக பசுபிக்வகை தேங்காய்கள் தென் அமேரிக்கா மற்றும் மத்திய அமேரிக்கா பகுதிகளுக்கு கொண்டு சேர்க்கப் பட்டதாகவும் கூறப்படுகின்றது.



### குரங்கு மூஞ்சி coconut

" Cocos nucifera " எனும் தாவரவியல் பெயரினைக்கொண்ட தென்னையினை முதன் முதலாக பார்த்த போர்துகீசியர்களுக்கு அதில் இருந்த கண் போன்ற மூன்று ஓட்டைகள் பார்ப்பதற்கு "கோகோ மூஞ்சியை" போன்றே இருந்ததாம். அட "கோகோ " என்றால் போர்த்துகீசிய மொழியில் அர்த்தம் என்ன தெரியுமா? குரங்கு மூஞ்சி ! குரங்கின் முகம் போல தெரிந்த தேங்காயிற்கு அவர்கள் வைத்த பெயர் தான் " coco nut ".அதுமட்டுமன்றி போர்த்துகீசிய நாடோடிக் கதைகளில் வரும் கோகோ என்கிற பேயின் முகம்போலவும் தேங்காய் இருப்பதாக அவர்கள் நினைத்தார்கள் . அன்றைய அரேபிய வணிகர்கள். தேங்காயை " Indian nut" என்று அழைத்தார்களாம். 16 ஆம் நூற்றாண்டிலிருந்தே ஐரோப்பியர்கள் தேங்காயினை தங்கள் உணவில் சேர்த்துக்கொள்ள ஆரம்பித்துள்ளனர். தேங்காயைக்கொண்டு அலங்கார பொருட்களையும் தயாரித்துள்ளனர். தேங்காயின் வடிவத்தினை பார்த்து அதற்கு மந்திர சக்தி உண்டு என்கிற நம்பிக்கையும் ஐரோப்பியர்களிடம் வலுவாக இருந்தனவாம் 19 ஆம் நூற்றாண்டுவரை.

சரி தேங்காய் எனும் தமிழ் வார்த்தையின் அர்த்தம்தான் என்ன ? சங்ககாலத்தில் இதனை தெங்கு என்றும் தெங்கம் என்றுமே அழைத்துள்ளனர் தெங்கம் மரத்திலிருந்து கிடைக்கும் காய் (தெங்கம்+ காய் ) தெங்கங்காய் எனும் வார்த்தையாக உருவாகி பின்னாளில் அது தேங்காய் என மறுவியதாக கூறப்படுகின்றது. இங்கே இன்னொரு முக்கியமான விடயமொன்றினையும் குறிப்பிட்டாகவேண்டும். அதாவது கிபி ஏழாம் நூற்றாண்டினை சேர்ந்த பக்தி இலக்கியங்களில் கூட கோவில்களில் தேங்காய் உடைத்தல் பற்றிய எந்த குறிப்பும் இல்லை என்பதுடன், கிபி பத்தாம். நூற்றாண்டுவரையில் இறைவனுக்கு படைக்கப்படும் பொருள்களின்

28 ஆம் பக்கம் பார்க்க...

தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள
"பண்டாரவன்னியன் புத்தகசாலையில்"
ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.

பண்டாரவன்னியன் புத்தகசாலை

தொடர்புகளுக்கு:
பண்டாரவன்னியன் புத்தகசாலை
வவுனியா, இலங்கை
+94772244616
youtube@akkakuruvi

இது வெற்றிமணியின்
ஒரு இலவச விளம்பரம்.
நம் இளைஞர்கள்
முயற்சிக்கு
கைகொடுப்போம்!

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்

# கனடா உதயன் பத்திரிகையின் பல்சுவைக் கலைவிழா ஸ்காவுறோவில்







புலம்பெயர் தமிழர்களின் உச்ச நட்சத்திரப் பத்திரிகையாக கனடா உதயன் விளங்குகிறது.

கனடா ஒன்ராறியோ மாநில முதியோர் நலன் பேணல் விவகார அமைச்சர் றேமண்ட் சோ,கனடா பாராளுமன்ற உறுப்பினர் சல்மா ஷாகித்,ரொறொன்ரோ நகர பிரதி மேயர் ஜெனிபர்,ரொறோன்ரோ நகர கவுன்ஸ்லர் ஜமால் மேயர், ஊடகவியலாளர்கள்,எழுத்தாளர்கள்,கவிஞர்கள்,பத்திரிகையாளர்கள்,தமிழகப் பாடகர் வி.எம்.மகாலிங்கம் மற்றும் சுமார் நாநூறுக்கும் மேற்பட்ட நேசத் தமிழ் நெஞ்சங்கள் கலந்து கொண்ட கனடா உதயன் விழாவுக்கு சுவிஸ் தொழிலதிபரும்,சுவிஸ் தமிழ் இலக்கியச் சங்கத்தின் தலைவரும்,எழுத்தாளரும்,கலாநிதி கல்லாறு சதீஷ் நாகேஸ்வரன் அருள்ராசா அவர்கள் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

பிரதம விருந்தினர் கல்லாறு சதீஷ் அவர்களுக்கு கனடிய நலவாழ்வு அமைச்சர் றேமண்ட் சோ பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததுடன்,ஒன்ராறியோ மாநில பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி,ரொறோன்ரோ மாநகர கவுன்ஸிலர் ஜமால் மேஜர்ஸ் ஆகியோர் கனடா வருகையை வரவேற்று அவர்தம் தமிழ்ப் பணியை வாழ்த்தி உரை நிகழ்த்தியதுடன் சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவித்தார்கள்.கனடிய அரசு சார் உறுப்பினர்கள் கல்லாறு சதீஷ் கனடா வந்த மூன்று சந்தர்ப்பங்களிலும் அவரை வாழ்த்தி வரவேற்பது தமிழுக்குக் கனடா வழங்கும் முக்கியத்துவத்தின் ஒரு பகுதியாகவே நோக்கப்படுகிறது.

பிரதம விருந்தினர் கல்லாறு சதீஷ் தனது உரையில்“கிறிஸ்துவுக்கு முன்னர் 161 ஆம் ஆண்டு சோழமன்னர் எல்லாள னுடைய ஆட்சி மௌனித்தது,கிறிஸ்துவு க்குப்



பின்னர் 1077 ஆம் ஆண்டு ராஜேந்திர சோழ மன்னனின் ஆட்சி மௌனி த்தது, 2009 ஆண்டு மீண்டுமொரு முறை தமிழர்களின் ஆயுதங்கள் மௌனித்தன, இப்படி ஆயிரம் ஆண்டுக்கு ஒரு முறை தான் மண் மீட்பும்,வெற்றியும்,தோல்வியும் மாறி மாறி நிகழ்ந்தன! உயிர்கள் விதைக்கப்பட்டன.

எனவே தங்களின் உரிமைகளுக்காகத் தமிழர்கள் எதிர்காலத்தில் “அன்பு “என்கிற வழியை மட்டுமே கடைப்பிடிக்க வேண்டும்,அதற்காகக் கல்வியிலும், பொருளாதாரத்திலும் தங்களை மேலும் வளர்த்துக்கொண்டு பேச்சு வார்த்தைகளின் மூலம் மட்டுமே தமிழர்கள் தாங்கள் இழந்த உரிமைகளை மீட்டுக்கொள்ள வேண்டும், என்று பேசினார்.

மற்றும் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள்,மேயர், கவுன்சிலர்,என்று பலரும் உரை நிழ்த்த நடனம்,நாட்டிய நாடகம் என இயல்,இசை,விழாவாக உதயன் பல்சுவைக் கலாச்சாரவிழா இனிதே நடைபெற்றது.

கடந்த 27 ஆண்டுகளாக உதயன் என்றும் அதற்கு முன்னர் 3 ஆண்டுகள் சூரியன் என்றும் முப்பதாண்டுகள் வரலாறைக் கொண்டது கனடா உதயன் பத்திரிகை. கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு. லோகன் லோகேந்திரலிங்கம் அவர்களின் சிந்தனையிலும்,தேனீயைவிடச் சிறந்த சுறு சுறுப்பிலும்,அவர்தம் பாரியார் திருமதி லோகேந்திரலிங்கம் பாப்பா அவர்களின் ஆலோசனையிலும் கனடா உதயன் புலம்பெயர் தமிழர்களின் தனித்த அடையாளத்தைப் பெற்ற பத்திரிகையாகத் திகழ்வதை அவதானிக்க முடிகிறது. கனடா உதயன் பத்திரிகை கடந்த ஞாயிறு(15.10.2023) அன்று மாலை ஸ்காவுறோ தமிழிசைக் கலாமன்றத்தில் நடாத்திய பல்சுவைக் கலைவிழா பத்திரிகையின் வெற்றியின் ஒரு அடையாளம் என்று கூறலாம். இந்த நிகழ்வுக்கு மட்டுமே சுமார் முப்பதற்கும் மேற்பட்ட வர்த்தகப் பிரமுகர்கள் நிதி அனுசரணை வழங்கியதுடன் அல்லாமல் விழாவுக்கு வந்தும் சிறப்பித்தனர்.





அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்

# நான் செத்த நாள்

**உண்மைக் கதை உரைத்தவர் புஸ்பா.**
**கேட்டு எழுதியவர் மூர்த்தி மாஸ்ரர்**



இன்று 20.10.2023. 36 வருடங்களுக்கு முன்னர் இதே நாளில் தான் அது நடந்தது. 20.10.87 நான் செத்துப் போகத் தொடங்கிய நாள். நான் செத்துப் போகத் தொடங்கிய இடம் சுண்டுக்குளி பெண்கள் பாடசாலை. நான் செத்துப் போகத் தொடங்கிய நேரம் சுமார் 20.00 மணி

ஐயோ ஆமி வந்துட்டான் ஓடுங்கோ! ஓடுங்கோ! சத்தம் கேட்டது.ஆட்கள் காணிகளுக்கு ஊடாக விழுந்து அடித்து ஓடும் சத்தம் கேட்டது. எங்கே ஓடுவது? தெரியாமல் ஓடினோம். இரவு தொடங்கிய நேரம் அது. மழை இருட்டும் சேர்ந்து கும்மிருடாக மாறி இருந்தது. சில காணிகளை கடந்து அந்த சந்தன மாதா கோவிலைத் தாண்டி ஓடினோம். செல் குண்டுகள் பறக்கும் சத்தம் வெடிக்கும் சத்தம் வெளிச்சம் கக்கிய அகோரம் எதுவும் எம்மைத் தடுக்கவில்லை.

கோவிலைத் தாண்டி இருந்த பெரிய கட்டிடம்.அது சுண்டுக்குளி மகளிர் பாடசாலை. அங்கு தான் ஓடினோம். நாங்கள் ஒவ்வொரு வகுப்பறைகளுக்கு உள்ளும் புகுந்து கொண்டோம். அறை நிறைந்து இருந்தது. நிலத்தில் அமர்ந்து கொண்டோம். யாரும் எமக்கு கட்டளை போடவில்லை.ஆனால் நாங்கள் அமைதியாக இருந்தோம்.

திடீரென்று பாரிய சத்தம் கேட்டது. எமது அறைக்கு முன்பு இருந்த மரத்தில் வீழ்ந்து வெடித்தது ஒரு குண்டு. எமது அறைக்குள் எம்மத்தியில் வீழுந்து வெடித்தது அடுத்த குண்டு. ஒரே புகை நாற்றம். யாரையும் காணவில்லை. ஒன்றும் தெரியவில்லை. ஆனால் நான் அப்போது உயிருடன் இருந்தேன். என் அருகில் இருந்தவர்கள் யார் என்று தெரியாது. என்ன ஆனார்கள் என்றும் தெரியாது. இரத்தம் ஓடியது எனது பாவாடை நனைந்தது. கை கால்கள் நனைந்தன இரத்தத்தால்.

அடுத்த அறைகளில் இருந்தவர்களின் அழுகுரல் சத்தம் கேட்டது. ஆனால் நான் இருந்த அறையில் இருந்தவர்களின் எந்த சத்தமும் கேட்கவில்லை. நானும் சத்தம் போடவில்லை. அழவும் இல்லை. எனக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. உணர்ச்சி எதுவுமில்லை. மரக்கட்டையாக இருந்தேன்.

அப்படித்தான் மற்றவர்களும் இருந்து இருப்பார்கள். யாரோ ஓடிவரும் சத்தம் கேட்டது. ரோச் லைட் வெளிச்சம் நூந்து நூந்து எரிந்து எம்மை நோக்கி வந்து கொண்டிருந்தது. லைற் வெளிச்சத்தில் என் அருகே பக்கத்து வீட்டு லீலா அக்கா.

அவரின் கணவர் வெளிநாட்டிலிருந்து அன்று தான் வந்தவர். சாவகச்சேரி வரை வர முடிந்த அவர் அங்கிருந்து ஒரு சைக்கிளை இரவலாக எடுத்துக்கொண்டு சுமார் ஒரு மணியளவில் வீடு வந்து சேர்ந்தார். நீண்ட காலம் பிரிந்து இருந்த அவரது இரு பெண் பிள்ளைகளையும் அவரது மனைவியையும் கண்டு ஆசைதீரக் கதைத்து முடிக்கவில்லை. எங்களுடன் அவரும் சேர்ந்து ஓட வேண்டி இருந்தது. லீலா அக்கா இரத்த வெள்ளத்தில் மூச்சு பேச்சின்றி கிடந்தார். நான் முதலில் கண்டது அதைத்தான். அவரைத்தான். நீண்ட காலமாக பிரிந்திருந்த கணவரின் கையில் தனது இரு மகள்களையும் ஒப்படைத்து விட்டு, மீண்டும் வரவே முடியாத இடத்திற்கு அவர் சென்று விடுவதற்காக, இவ்வளவு காலமும் கணவருக்காகக் காத்திருந்திருக்கிறார். என்பதை அன்று நான் உணரவில்லை. அதன் பின்னர் அதை நினைத்து நினைத்து மனதால் அழுது கொண்டே இருக்கிறேன். அந்த அழுகைக்கும் இன்று 36 வயதாகி விட்டது.

எனது மருமகள் பாமா அவளது கையில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டு இருந்தது. குண்டுத் துண்டுகள் அவளது கையை துளைத்து மறுபக்கம் சென்று விட்டது. இரத்தம் வடிந்த படியே அவள் அரை மயக்கத்தில் மிகுந்த பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்தாள். விவேகானந்தன் 9 வயதே நிறைந்த அவன் தனது தாயின் மடியில் ,எனது ராதா அக்காவின் மடியில் இருந்தபோது, உடலையும் தலையையும் துளைத்து சென்ற குண்டுத் துண்டுகள் அவனது உயிரையும் எடுத்து விட்டது என்பது அந்த நேரம் எனக்கு தெரியவில்லை. மறுநாள் அவனது உடலை அவர்கள் வீட்டில் வாங்கு கட்டிலின் மேல் கிடத்தி வைத்திருந்தார்கள். ராதா அக்காவும் தலையில் காயத்துடன் தலை சாய்த்து கிடந்தார். வைத்தியசாலைக்கு எல்லாரையும் அள்ளி எடுத்துச் சென்று கொண்டிருந்தார்கள் போராளிகள்.அந்த அவல இடத்திற்கு உடனே போராளிகள் வந்து சேர்ந்த படியால் அவர்கள் மூலம் பலரது உயிரை காப்பாற்ற கூடியதாக இருந்தது. மேலும் சிலரை வைத்தியர்களால் கூடக் காப்பாற்ற முடியாமல் போனது. போராளிகளை குறிவைத்து, கிடைத்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, சுண்டிக்குளி பெண்கள் பாடசாலையை நோக்கி குண்டு வீசியதாக தங்கள் கதையை பின்னர் வெற்றிகரமாக முடித்தது, இந்திய இராணுவம். ஆனால் குண்டு வீழ்ந்த பின்னரே அதுவும் எங்களை காப்பாற்றவே போராளிகள் அங்கு வந் தார்கள்.

ராசா அண்ணர் (அதிபர் தர்மலிங்கம்) மற்றும் அவரது தந்தையான அதிபர் கந்தையா மாஸ்ரர் ஆகிய இருவருமே அந்த ஊர் மக்களை ஆமியிடம் இருந்து காப்பாற்றுவதற்காக வெளியேறுமாறு கூறி உதவி செய்ய ஓடி வந்தவர்கள். வைத்தியசாலைக்கு தூக்கிச் செல்லப்பட்ட இருவரும் உயிரற்ற உடல்களாக மீண்டும் அவர்களது வீட்டிற்கு தூக்கி வரப்பட்டார்கள். எங்கள் முன் வீட்டு 3 வயதுக் குழந்தை வருணன். அள்ளி எடுத்துச் செல்லப்பட்ட இவர்களில் ஒருவனாக இருந்தான். வைத்தியசாலையில் இருந்து மீண்டும் கொண்டுவரப்பட்டு அவனது உடல் அவர்கள் வீட்டில் ஒப்படைக்கப் பட்டது. எனது மகள் முறையான சித்திரா நெத்தியில் காயத்துடன் என்னருகே மயங்கி கிடந்தாள். கையை நீட்டி அவளது கரத்தைப் பிடித்து இழுத்துப் பார்த்தேன். என்னால் முடியவில்லை. அவள் இறந்து விட்டாள் என்று நினைத்தேன். அழுகை வரவில்லை. கிடைக்கும் வெளிச்சத்தில் மற்றவர்களை என் கண்கள் ஒவ்வொன்றாக தேடிக் கொண்டு இருந்தன.

மறுநாள் அதாவது 21ம் திகதி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் மீண்டும் இந்திய ராணுவத்தினர் புகுந்து கண்மூடித்தனமாக பலரை சுட்டுக் கொன்ற சம்பவம் நடந்தது. அன்று மற்றவர்களும் இறந்து விட்டார்கள் என்று நான் நினைத்தேன். அன்று மழை பெய்து கொண்டிருந்தது. எங்கள் வீட்டிலும் அயல் வீடுகளிலும் உயிரற்ற உடல்கள். கிடுகு வேலி ஓட்டைகளூடாக மாறி மாறி போய் வந்து கொண்டு இருந்தேன். இரத்தம் வடிந்த உடுப்பு மழையில் நனைந்த ஈரம் என்னை எதுவும் செய்யவில்லை அன்று. அன்று அழுகை வரவில்லை. இன்று அழ முடியவில்லை. 36 வருடங்கள் ஓடி விட்டனவே.



21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நெடுஞ்சுடர்

பட்டியலில் தேங்காய் இடம்பெற்றிருக்கவில்லையாம். ஆக, கோவில்களில் தேங்காய் உடைக்கும் வழக்கம் என்பது பிற்காலத்தில் தான் வந்திருக்கவேண்டும் என்கின்றனர் ஆய்வாளர்கள். வரலாற்றின் இடைக்காலத்தில்தான் தேங்காயை இறைவனுக்கு படைக்க, இளநீர் அபிஷேகம் செய்ய ஆகம அனுமதி பெறப்பட்டது என பாரதிதாசன் பலக்லைக் கழக அறிவியல்துறை முனைவர் கு.வி கிருஷ்ணமூர்த்தி என்பவர் தனது ஆய்வுநூலில் குறிப்பிட்டுள்ளார் .

ஒரு தென்னை மரம் சராசரியாக 80 ஆண்டுகள் முதல் 200 ஆண்டுகள் வரை வாழக்கூடியவை என்பதுடன் அதில் பல்வேறு மருத்துவ குணங்களும் நிறைந்து காணப்படுகின்றன. புரத சத்து, மாவுச் சத்து, கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு முதலிய தாது பொருட்கள் , வைட்டமின் சி,நார்ச்சத்து என்று உடல் இயக்கத்திற்கு தேவைப்படும் அனைத்து சத்துக்களும் தேங்காயில் நிரம்பவே இருக்கின்றன. தேங்காய் எண்ணெய் பல நூற்றாண்டு காலமாக மனிதனால் உணவாகவும் , மருந்தாகவும் அழகு சாதன பொருளாகவும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. உலகில் பல பகுதிகளிலும் தலைக்கு தேய்க்க மற்ற எண்ணெய்களைவிட தேங்காய் எண்ணெய் தான் அதிகமாக பயன்படுத்தப் படுகின்றதாம் வெப்ப மண்டல பகுதியில் வாழும் மக்கள் மற்ற பகுதி மக்களைவிட அதிக ஆரோக்கியம் நிறைந்தவர்களாக இருப்பதற்கு முக்கிய காரணம் அவர்கள் சமையலில் தேங்காய் எண்ணெய் இருப்பதுதான் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் தேங்காய் எண்ணெய் கொழுப்பு நிறைந்தது, இதயத்திற்கு ஆபத்தானது என சொல்லப்படுவதெல்லாம் ?

நிச்சயமாக இது மிகப்பெரிய காப்பரேட்டுக்களின் அரசியல்தான். ஆசிய நாடுகளில் தேங்காய் எண்ணையின் சந்தையை ஒழித்துக்கட்டிவிட்டு தங்களது மேற்கத்தைய சமையல் எண்ணெய்களை அதிக அளவில் இறக்குமதி செய்வதற்காக மற்றைய தேசங்களினால் கட்டியெழுப்பப்படும் பொய் பிரசாரங்கள் அவை.தேங்காயில் உள்ள “fatty acid“ உடலில் உள்ள கெட்ட கொழுப்பினை கரைத்துவிடுவதுடன் உடல் எடையினை குறைக்கிறது

என்கின்றன ஆய்வுகள்.உலக அளவில் தேங்காய் உற்பத்தியில் முதல் இடத்தில் இருக்கும் நாடுகள் இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் . மூன்றாவது இடத்தினை இந்தியா பிடித்துள்ளது.

இங்கே ஓர் விசித்திரமான தகவல் ஒன்றினையும் பகிரவேண்டும்.அதாவது வியட்நாமை சேர்ந்த “ Nguyen thanh nam “ எனும் அறிஞரால் 1963 ஆம் ஆண்டு “dao dua“(தேங்காய் மதம் ) எனும் புதிய ஓர் மதம் தோற்றுவிக்கப்பட்டதாம்.. தன்னை அவர் தேங்காய் குரு என அழைத்துக் கொண்டதுடன், தேங்காய்க்கான ராஜ்யத்தினை உருவாக்குவதும், தென்னையையும் தேங்காயையும் வழிபடுவதுதான் இம்மதத்தின் முக்கிய குறிக்கோள் எனவும் பிரசாரம் செய்துவந்துள்ளார். தேங்காய் மதத்தில் இணைந்துகொண்டவர்கள் தேங்காய் சார்ந்த உணவுகள் மட்டுமே உண்ண அனுமதிக்கப்பட்டதுடன், மதத்தில் இணையும் ஆண்களுக்கு ஒன்பது பெண்களை திருமணம் செய்துகொள்ளும் சிறப்புசலுகையும் வழங்கப்பட்டதாம். தெற்கு வியட்நாமில் நீரில் மிதக்கும் பிரமாண்டமான தேங்காய் கோவிலொன்றும் இவரால் கட்டப்பட்டது. பின்னர் 1975 ஆம் ஆண்டு வியட்நாம் அரசினால் இந்த மதம் தடை செய்யப்பட்டுவிட்டது. ■

24 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பால்வண்ணம்

உணர்வுகளின் அழுத்தத்தில் தத்தளிக்கும் ஒரு தாயின் மனநிலையைப் போல்,பல்வேறு விதமான வீட்டு வன்முறைகள் பெண்களை மன உளைச்சலுக்கு ஆளாக்குகின்றன. இவ்வாறு சிந்தனைகளைக் கிளறி விட்டு வாசகர்களை சிந்திக்கத் தூண்டி, சமூக மாற்றத்தை வேண்டி நிற்கும் இச்சிறுகதைகள் தி ஜானகி ராமன், குப்பிளான் சண்முகம் போன்றவர்களின் சிறுகதைகளோடு ஒப்பீடு செய்து பார்க்க முடிகிறது. கே.எஸ்.சுதாகர் தொடர்ந்தும் இதே போல் இலக்கியத்தோடு இயங்க வேண்டும் என்று வாழ்த்துவோம்.வெற்றிமணி பத்திரிகையில் நீண்காலமாக இவரது படைபஇபுகள் வெளிவருவதும், பால்வண்ணம் நூலின் அட்டைப்படம் வெற்றிமணி ஆசிரியரின் கைவண்ணம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ■

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பொய்யுரைப்பார் ஒரு சினேஸ்தேசியா

மக்களுடன் பழகும் போது ஓடும் புளியம் பழமும் போலும் இல்லாமல் ஆழக் கண்ணோட்டத்தில் மன ஆழம் காணும் போதும் பொய்மைக்குச் சாவு மணி அடிக்கலாம் என்று கருதுகின்றேன்.

அதிசயமான உணர்வுகளைக் கொண்டு மனிதர்கள் திரின்றார்கள். சாதாரணமாக ஐம்புலன்கள் வழி உணர்வுகளை உணர்ந்து கொள்ளும் எம்போன்றவர்களுக்கு அவர்கள் உணர்வுகள் பொய் போலவே தெரியும். உதாரணமாக சினெஸ்தேசியா (synes thesia) என்னும் தன்மையுள்ள மனிதர்கள் எழுத்துக்களையும் சொற்களையும் வண்ணமாகக் காண்பார்கள். உதாரணமாக யு என்ற எழுத்தை அவர்கள் சிவப்பு நிறமாக காண்பார்கள். ஏதாவது ஒரு பொருளைப் பார்த்தால் ஒரு மணத்தை உணர்வார்கள். சிலருக்குத் தொடாமலே சிலவற்றை உணரமுடியும். உதாரணமாக ஒரு நோயாளிக்கு உள்ள வலியை மருத்துவர் தானாகவே உணர்வார். மற்றவர்கள் கைகொடுத்தால், அந்த உணர்வை இந்த நோயுள்ளவர்கள் தாம் கைகொடுப்பது போல உணர்வார்கள். இதையே வள்ளுவப் பெருந்தகை

> **கண்ணும் கொளச்சேறி நெஞ்சே**
> **இவையென்னைத்**
> **தின்னும் அவர்காணல் உற்று**

என்கிறார். கண் என்பது பார்த்தல் என்னும் புலனை உணரும் ஒரு உறுப்பு. ஆனால், இங்கு கண் தின்கின்ற தொழிலைச் செய்கின்றது. இதுவும் சினெஸ்தேசியா என்னும் நோய் போலவேதான் என்பதை வள்ளுவர் எடுத்துக் காட்டியுள்ளார். எனவே உண்மையை மறைத்துப் பொய் கூறலும் ஒரு இயல்பான புலன் வகைக்குள் அடங்காத ஒரு நோய் என்றே கொள்ள வேண்டியுள்ளது. ■

11 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## சமச்சீரான உணவே

பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகள் ஹம்பேர்கர் போன்ற இறைச்சி வகைகள் சோஸ் வகைகள் ஊறுகாய் அச்சாறு போன்றவை அதீத உப்பிற்கு நல்ல

உதாரணங்களாகும்.இவற்றில் மட்டுமின்றி நாம் சந்தேகிக்காத பல உணவுகளிலும் உப்பு அதிகமாக இருக்கிறது. பாண் கேக் பிஸ்கற் போன்றவற்றைச் சொல்லலாம். பிள்ளைகளும் பெரியவர்களும் விரும்பிச் சாப்பிடும் பொட்டேட்டோ சிப்ஸ் போன்ற வகைகளில் நிறைய உப்பு இருக்கிறது.

பக்கற்றில் கிடைக்கும் உருளைக் கிழங்கு பொரியல் மாத்திரமின்றி மரவள்ளி பாகற்காய் பொரியல்கள் யாவுமே உப்புப் பண்டங்கள்தான். ஒருவரது தினசரி உப்புத் தேவை ஒரு தேக்கரண்டிக்கு மேற்படக் கூடாது. உப்பு அதிகமுள்ள பதப்படுத்தப்



பட்ட மற்றும் கடை உணவுகளை ஒதுக்குங்கள். உப்பைக் குறைப்பது நல்லது. பழவகைளை உணவுகளில் அதிகம் சேருங்கள். சமச்சீரான உணவுகள் (Balanced food) உட்கொள்வது நல்வாழ்வற்கு உகந்தது. சமச்சீரான உணவே நடடவாழ்வுக்கு உகந்தது! ■

**நன்றி.தமிழர்தகவல் கனடா.**

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நமது கதைகளை முழுவதுமாக

ஒரு நாட்டில் யுத்தம் நிகழுகிறபோது வெற்றியும் தோல்வியும் நிகழும், ஒரு பகுதி வெற்றியடைந்தால் நிச்சயமாக இன்னும் ஒரு பகுதி தோல்வியை சந்திக்கும். இது நியதி. ஆனால் இந்த நாட்டைப் பொறுத்தவரை உலக வல்லாதிக்க சக்திகளின் துணையோடு திட்டமிட்டு இன அழிப்பு செய்யப்பட்ட ஒரு இனத்தின் கண்ணீர்த் தடங்கள் காய்வதற்கு முன்பாக அந்த இனத்தின் எஞ்சிய உணர்வுகளைத் தீண்டும் வகையிலான இத்தகைய வெற்றிச் சின்னங்களின் நிர்மாணிப்பும், நினைவுச் சின்னங்களின் மீதான அழிப்பு அழுத்தங்களும் எரிகிற தழலில் எண்ணை ஊற்றுவதாகத்தான் முடியுமே அன்றி இந்த நாட்டின் சுபீட்சமான இன இணக்கப்பாட்டிற்கு வழிகோலும் என்று கனவிலும் நினைக்க முடியாது. ■







அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்



# நாலுபேர் அப்படிக் கதைக்கினம்

சிவப்பிரியன்
(இங்கிலாந்து)

என்ன ஊரில பெரி வீடு கட்டுப் படுதாம். இஞ்ச வேலை வேட்டி ஒன்றும் இல்லை எப்படி உன்னாலை கட்டமுடியுது? சோசல் காசில் மிச்சம்பிடித்து அதை பிறகு வட்டிக்குகொடுத்து, சீட்டுகளும்போட்டு அதிலும் ஏதோபுரளிபண்ணி, உன்னுடைய அப்பா அம்மாவிற்கு இங்க கொடுகிற காசிலும் சுத்தித்தான் ஊரிலை பெரிய வீடு ஒன்று எழும்புது என்று நாலு பேர் கதைக்கினம் தம்பி.

இந்த தம்பி கொஞ்சம் அந்த இடத்தில் அழுத்தமாக வரும். அதன் அர்த்தம் நான் அப்படி ஒன்றும் நினைக்கவில்லை என்பதை சொல்வதற்கான அழுத்தம் தான் அது. உண்மையில் இந்தபேச்சில் நாலுபேர் கதைகிறார்கள் அவர்கள் யார் என்று தேடினால் அவர்கள் யாவரும் சொல்பவருக்குள் வசிப்பவர்களாகவே இருப்பார்கள்.

அந்த நாலுபேரும் இவரேயன்றி வேறு எவரும் கிடையவே கிடையாது.


தனது கருத்தை நாலுபேருக்குபின்னால் மறைந்து நின்று சொல்லும் ஆசாமிகள் இவர்கள். இவர்களுக்காக நீங்கள் உங்கள் நடையை ஏன் உடையைத்தன்னும் மாற்றவேண்டியதில்லை. நீங்கள் ஒரு முறை மாறினால் போதும், அவர்கள் இலவச அலோசகர்களாக உங்கள் வாழ்நாள் முழுவதும் வருவார்கள். நீங்கள் நீங்களாகவே வாழமுடியாது.

இந்த நாலுபேர் சங்கதியை எமக்கு வெளியில் இருந்து வந்து எவரும் சொல்லித் தரவில்லை. எங்கள் வீட்டில் அம்மா அப்பா அன்று சொல்லித் தந்ததுதான் இந்த நாலுபேர் சொல்லுகினம் என்ற கதை..

பிள்ளை நீ சோதனை பெயில்விட்டால் நான் தெருவில் தலைகாட்டமுடியாது. நாலுபேர் நாக்கை பிடுங்கிங்கிற மாதிரி "வாத்தியாற்றை பிள்ளை நாலுபாடம் பெயிலாம்" என்று சொல்லுவினம்.

ஆனால் இந்தக்கத்தலுக்கு பின்னால் பிள்ளை படிக்காமல் விட்டுவிட்டால் என்ற பயம் மறைந்து இருக்கும். ஆனாலும் அப்பா அம்மாவை இழுக்காது நாலுபேரை இழுத்து அவர்கள் கேள்விகேட்பார்கள் அது தனக்கு கேவலமாக இருக்கும் என்று முடிப்பார்கள்.

மேல் சொன்ன ஊரில் பெரிய வீட்டு கட்டும் கதை கதைக்கும், பிள்ளை படிக்காவிட்டால் நாக்கைப்பிடுங்கிற மாதிரி கேள்வி கேட்பினம் என்றதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இந்த நாலுபோர் மட்டும் எங்கும் வருவினம்.



இப்படித்தான் வெளிநாட்டில் நடந்த திருமணம் ஒன்று. தாய் தந்தையர் பேசி திருமணம் செய்த காலம் இல்லை. இப்போது அவர்கள் பேசி முடித்து தாய் தந்தையருக்கு சொல்லும் காலம். அது சரியும்கூடத்தான். அவர்கள்தானே வாழப் போகிறார்கள்.

முன்பு எங்கவீட்டுக்கல்யாணம். எல்லோரும் தங்கள் வீட்டுக் கல்யாணம்மாதிரி பறந்து கட்டி வேலை செய்வார்கள். ஊரிலை கல்யாணம் என்றால் கொழும்பு கண்டி எல்லாம் வெறிச்சோடிப் போய்க்கிடக்கும். எல்லாரும் ஊரில் வந்து நிற்பார்கள். வீடு நிறைய சொந்தங்கள்.

திருமண வீடு என்றால் விழுந்து விழுந்து கவனிப்பார்கள். பருப்பு என்று குரல் கொடுத்தால் பத்துபேர் தூக்குசட்டியுடன் வருவார்கள். பருப்பு போடும்போது என்னதம்பி அப்பா இப்ப எப்படி இருகறார். நாம் ஒன்றாக படித்த நாங்கள். அப்பாவைக் கேட்டதாகச் சொல்லுங்கள். என்று பருப்போடு பாசமும் கலந்து அவர் மகனின் முகத்தில் அவரின் தந்தையைத் தரிசித்து விருந்தோம் புவார்கள்.

இப்ப அதெல்லாம் அற்றுப்போச்சு. நான் காம் நம்பரில் நாலுபேர் வந்திருக்கினம் அவர்களுக்கு வடை கொடுங்கோ என்று சொன்னால் வடைவரும். சொந்த பந்தத்தின் வாடையே அங்கு கிடையாது.

ஒரு திருமணத்தில் என்ன உங்கள் மகனின் திருமணத்திற்கு வந்தேன் உங்களைக் காணவே இல்லை. அவ்வளவு கூட்டம் என்றேன். குறை நினைக்காதையுங்கோ நானும்தான் என்ர மகனின் கல்யாணத்தில் மகனைக் காணவே இல்லை என்று நகைச்சுவைப்படச் சொன்னார்.

இது நகைச்சுவையாகச் சொல்லப்பட்டாலும் அது தான் இன்று நடைமுறை என்பதும் உண்மையே. இப்போதும் பேச்சு திருமணங்கள் என்றால் சாதி பார்த்துதான் செய்யப்படுகிறது என்பது வருந்ததக்க உண்மையே. ஆனால் இனம் பார்ப்பது கிடையவே கிடையாது.

யேர்மன் போலந்து ஆங்கிலேயர் பிரஞ்சு ஸ்பானியர் என்று (நமக்கு எல்லாம் அவர்கள் ஒரே இனம் அதாவது வெள்ளையர் இனம் அவ்வளவுதான்) யாரை வேண்டும் என்றாலும், திருமணம் செய்யலாம். அங்கே எந்த வித ஏற்றத் தாழ்வும் கிடையாது.

ஒரு நல்ல சகுனம் என்னவென்றால் இந்த ஏற்றத்தாழ்வுகள் எல்லாம் நம்மோடு முடிந்துவிடும். இளையவர்கள் மனதில் இந்த ஏற்றத்தாழ்வுகள் அற்றுப் போயக் கொண்டு இருக்கின்றன.

எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை ஏற்றத்தாழ்வு கடுகேனும் இல்லை. இனம் மதம் சாதி கீதி கத்தரிக்காய் என்று ஒன்றுமே கிடையாது என்று சொல்பவர்களும், ஆனால் நாலுபேர் என சொல்வார்கள் அதைத்தான் யோசிக்கிறேன் என்பார்கள். அந்த நாலுபேர் யார் என்று இப்ப உங்களுக்கு புரிஞ்சிருக்கும். அந்த நாலுபேரும் யாருமல்ல அவரேதான்! ■



# யேர்மனியில் பிரமாண்டமான புத்தகத் திருவிழா






21.10.2023 அன்று 11.00 மணியில் இருந்து 19.00 மணி வரையில் ஜெர்மனி டோட்முண்ட் நகரில் அமைந்துள்ள தமிழர் அரங்கத்தில் பிரமாண்டமான புத்தகத் திருவிழா நடைபெற்றது.

இவ்விழாவினை பன்னாட்டுப் புலம் பெயர்தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் நடத்தியிருந்தது. இவ்விழாவில் எழுத்தாளர்களின் 18 நூல்களின் அறிமுகங்களும் நடைபெற்றன. திரு.பௌசர் அவர்கள் இலண்டனில் இருந்து ஆயிரக்கணக்கான புத்தகங்களைக் கொண்டு வந்து விற்பனைக்கு வைத்திருந்தார். வாசகர்கள் நிறைவாக வாசிக்கின்றார்கள் என்பதை இவ்விழா தெளிவுபடுத்தியது மனதுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

# யேர்மனி சத்திய நிருத்தியஸ்தானா நடனப்பள்ளியின் உஉ வது ஆண்டு விழா







கடந்த 21.10.2023 யேர்மனியில் வூப்பெற்றால் நவதுர்க்கா ஆலய மண்டபத்தில் சத்திய நிருத்தியஸ்தானா நடனப் பள்ளியின் 22 வது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. நடராஜர் பூசையுடன், மங்கள விளக்கேற்றி விழா சிறப்பாக ஆரம்பமானது. பிரதம விருந்தினராக நோர்வே நாட்டில் இருந்து கலாசாதனா அதிபர்,நடன ஆசிரியர், எழுத்தாளர் கவிதா லட்சுமி அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக,வருகை தந்த, சலங்கை ஒலி நாட்டிய பள்ளி அதிபர், சாவித்திரி சரவணன், MA. அவர்களும், ஆடற்கலாலய அதிபர், ஆடற்கலாமணி,ரெஜினா சத்தியகுமார் அவர்களும்,இராஜேஸ் நர்த்தனாலயம் அதிபர் முதுகலைமாணி ஶ்ரீமதி துஷ்யந்தன்,ஜெகதீஸ்வரன், ஆகியோரும்,கலந்து சிறப்பித்தனர். பல்வேறு வகை நடனங்கள் பார்பவர் மனதை பரவசத்தில் ஆழ்த்தியது. இராமாயணம் நாட்டிய நாடகம் பலரும் பாராட்டும்படி அமைந்தது. நடனங்களை சிறப்பாக நெறிப்படுத்தி, மாணவர்களை மேடையேற்றிய, சத்திய நிருத்தியஸ்தானா நடனப்பள்ளியின் ஆசிரியர்கள், நாட்டிய கலாஜோதி, ஜனுஷா. பிரதீப், நாட்டிய கலாஜோதி லாவண்யா நிரோஷன், நாட்டிய கலாஜோதி, நிலானி. கிறிஷாந் இவர்களின் நீண்டகால கலைச் சேவை பாராட்டவேண்டிய ஒன்றாகும். நிகழ்ச்சிகளை, சகநாயகன் சக்திவேல் அவர்கள் சிறப்பாக தொகுத்து வழங்கினார்.




அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்



# விஜய்க்கு வில்லனான மோகன்

பிகில் படத்துக்குப் பிறகு விஜய், ஏஜிஎஸ் நிறுவனத்துக்காக ஒரு படத்தில் நடிக்கவுள்ளார். இந்த படத்தை வெங்கட் பிரபு இயக்கவுள்ளார்.

இந்த படத்தின் அதிகாரபூர்வ அறிவிப்பு சில மாதங்களுக்கு முன்னர் வெளியான நிலையில் இசையமைப்பாளராக யுவன் ஷங்கர் ராஜா ஒப்பந்தமாகியுள்ளார். படத்தை ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிக்கிறது.சில தினங்களுக்கு முன்னர் இந்த படத்தின் பூஜை நடந்த நிலையில் படத்தில் நடிக்கும் பிரபலங்கள் கலந்துகொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதில் விஜய், பிரசாந்த், பிரபுதேவா, மோகன், சினேகா, மீனாட்சி சௌத்ரி உள்ளிட்டோர் கலந்து கொண்டதாக தகவல்கள் வெளியாகி



யுள்ளன.இந்நிலையில் இந்த படத்தில் பழம் பெரும் நடிகர் மைக் மோகன் வில்லனாக நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளாராம்.

இதற்காக அவர் வாங்காத சம்பளமாக 2 கோடி ரூபாய் சம்பளமாக கொடுக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. அவர் நாயகனாக நடித்துள்ள ஹரா திரைப்படம் விரைவில் வெளியாகவுள்ளது.

# நடிகனை தலைவன் என்று கொண்டாடாதே.. அசிங்கம் அவமானம்

## நடிகவேள் எம்.ஆர்.ராதா..!

இவரை போல ஒரு துணிச்சல்காரரை இந்திய வரலாறு இதுவரை பார்த்ததில்லை.. இனியும் பார்க்க போவதில்லை..!



கம்பர் விழாவில் பேசிய ராதா, "பெரியவங்களே, சின்னவங்களே, பொம்பளைங்களே... நீங்கள் எல்லாம் இப்ப எதுக்கு வந்திருக்கீங்கன்னு தெரியும். இந்த கம்ப நாடாரின் விழாவிலே..." என்று ஆரம்பித்தார்.

அப்போது, ஒருவர் குறுக்கிட்டு, "அய்யா... கம்பர் நாடாரு இல்ல.." என்றார்.

"நாடார் இல்லயா... நம்மாளு போலருக்கு, இந்த கம்ப முதலியாராகப்பட்டவர்..."

"அய்யா... அவரு முதலியாரும் இல்ல..." என்றார்.

"முதலியாரும் இல்லயா சரி... என்னன்னு புரிஞ்சு போச்சு இந்த கம்பர் அய்யர் ஆனவர்..."

"அய்யா... அவரு அய்யரும் இல்ல..."

"என்னது நாடார் இல்ல, முதலியார் இல்ல, அய்யரும் இல்லயா... அப்போ, இப்ப தான் ஜாதிகளை சொல்லிக்கிட்டிருக்கோமா... அப்ப ஜாதி கிடையாதா... சரி தான், இந்த ஜாதியில்லாத கம்பன் விழாவிலே..." என, ராதாவின் அந்த பேச்சு தொடர்ந்தது..!

"நாட்டிலே அதிகமா உழைக்கிறவனுக்கு கொஞ்சமா கூலி கொடுக்கிறான்... சினிமாவில கொஞ்சமா உழைக்கிறவனுக்கு அள்ளி அள்ளி கொடுக்கிறான். "பார்த்தியா, ரசிச்சியா அதோட கூத்தாடிய விட்டு போயிட்டே இரு.. அவன் அடுத்த கூத்துக்கு ரெடியா கிட்டே இருப்பான்.. அவன் உலகத்துக்குள்ள நுழைஞ்சி பாக்காதே.. அது ரொம்ப அசிங்கம்.. அவனை அரசியல்ல கூப்பிட்டு அழிஞ்சி போகாதே.. நீ அவனுக்கு காசு கொடுக்குற, அவன் நடிக்கிறான் அவ்வளவுதான். உன் வேலைக்காரன் அவன்.. அந்த வேலைக்காரனை தலைவன்னு கொண்டாடாதே.. அசிங்கம் அவமானம்" என்றார்.

# அஜித்தின் 'விடாமுயற்சி'யில் ரெஜினா



நடிகர் அஜித்குமார் துணிவு படத்தின் வெற்றிக்குப் பிறகு கிட்டத்தட்ட 9 மாதங்கள் கழித்து தனது அடுத்த படமான "விடாமுயற்சி" படத்தில் நடிக்க தொடங்கியுள்ளார்.

இதனை மகிழ்திருமேனி இயக்குகிறார். லைகா புரொடக்சன்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு அனிரூத் இசையமைக்கிறார். இதில் கதாநாயகியாக த்ரிஷா நடிக்கின்றார். மற்றொரு கதாநாயகியாக நடிக்க பொலிவுட் நடிகை ஹுமா குரேஷி ஒப்பந்தம் ஆகியுள்ளதாக கூறப்பட்டு வந்த நிலையில் தற்போது திடீர் மாற்றமாக ஹுமா குரேஷிக்கு பதிலாக கேடி பில்லா, நெஞ்சம் மறப்பதில்லை, சரவணன் இருக்க பயமேன் ஆகிய படங்களில் நடித்த ரெஜினா கசண்டரா ஒப்பந்தம் ஆகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.






Jasmine Silk House
ஆடைகளின் ராணி
ஒளி ஏற்றும் இன்பத் தீபாவளி
எமது மலிவு விற்பனையில்
நீங்களும் கலந்து
பயனடையுங்கள்
'என்றும் புதியது உங்கள் தெரிவுக்கு உகந்தது'
இனிய தீபத் திருநாள் வாழ்த்துகள்
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen

Kfz-Ingenieurbüro
NADANAM
Sachverständiger | Unfallgutachter
SIE HATTEN EINEN UNFALL? WIR HELFEN!
வாகன விபத்தா? உங்களில் தவறு இல்லையா?
கட்டணம் எதுவுமின்றி நாங்கள் உதவுகிறோம்!
விபத்தினால் ஏற்பட்ட சேதத்திற்கான தொகையை
மிகக் குறுகிய காலத்துக்குள் மதிப்பீடு செய்து தருவோம்.
உடனே எங்களை நாடுங்கள்.
B.Eng. Diesanth Nadanapatham
0175 5086977

PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
இனிய தீபத் திருநாள் வாழ்த்துக்கள்
Ludwig str.87a
70197
Stuttgart
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்ரேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
SALE
Stuttgart நகரில்...
Tel: 0711 615 8976/ 0170 334 4059

RE/MAX
வீடு வாங்க விற்க
Buy & sell property
Sakthiya Nagaselvam Immobilienmaklerin IHK § 34c
உலகின் முன்னணி நிறுவனமான Remax அனுமதிக்க முகவர் ஊடாக (Tamil, German, English)
எளிய வழியில் உரையாடி உங்கள் கனவு இல்லத்தை நினைவாக்குங்கள்.
- யேர்மனியில் வீடு விற்க விரும்புகின்றீர்களா?
- வீடு வாங்க விரும்புகின்றீர்களா?
- உங்கள் சொந்த வீட்டின் பெறுமதியை அறிந்து கொள்ள விரும்புகின்றீர்களா?
- வீடு வாங்குவதற்குண்டான வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா?
IHRE IMMOBILIE VERKAUFEN?
World No1 Real Estate Agent
மிக இலகு வழியில் வீட்டுக்கடன் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனையுடன் கூடிய அனைத்து வழிகளிலும் பெற்றுத்தரப்படும்.
மேலதிக விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
M: +49 176 32329957 | M: +49 52130515180 | E: sakthiya.nagaselvam@remax.de
www.nagaselvam-remax.de

FRANKFURT நகரில் புதிய உதயம்
இலங்கை,
இந்தியாவிற்கான
விமான சிட்டைகள்
குறைந்தவிலையில் துரிதமாக
பெற்றுக்கொள்ள
TRUST TRAVELS Reisebüro
Mob: 017 645656520 Tel: 069 24 24 8079
Inhaber : ஜெயக்குமார் வினோத்குமார்
TRUST TRAVELS
YOUR ADVENTURE-OUR EXPERTISE
அத்துடன் துரித
பணப்பரிமாற்று
சேவையையும்
பெற்றுக்கொள்ளுங்கள்

STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM அகம்
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
இனிய தீபத் திருநாள் வாழ்த்துக்கள்
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698